www.tamilarangam.net

நட்புறவு

# பாலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விமர்சிப்போம்

இதழில் ஈழப்புரட்சி அமைப்பின் கருத்தாக்கங்களும் செயல் முறைகளும் குறித்த ஆக்கங்கள் கூடுதலாக இடம் பெற வேண்டும். ஈழத்தின் சமூகவியல் ஆய்வுகள் பலவும் இடம் பெற்ருல் சிறப்பாக இருக்கும்.

இரணியன் கோவை-1.

பாலம் பத்திரிகையின் நோக்கமே ஈழ மக்களின் விடுதலையை மேலும் கூர்மைப் படுத்துவதாக அமைய வேண்டும்.

ஈழ மக்களின் வாழ்க்கை பண்பாடு வரலாறு போராட்ட வரலாறு துன்பத்தின் இன்றைய நிலை இவை பற்றி பரப்பும் கருவியாக பாலம் அமைய வேண்டும்.

கா. துரைராஜ் பொள்ளாச்சி.

ஒவ்வொரு நாட்டிலும் நடக்கும் விடுதலைப் போராட்டம் பற்றி விளக்கச் செய்தியுடன் வெளியிட்டால் உலக விடுதலை இயக்கங்கள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

புதியக் கல்விக் கொள்கை மக்களை ஏமாற்றும் தந்திரமே என்பதை விளக்கமாக எழுதியிருந்தீர்கள்.


இலங்கை அகதிகளின் வாழ்வு கண்களில் செந்நீர் வர வழைப்பதாகவுள்ளது.

மா. இளங்கோவன் இராசபாளையம்.

'மாகாண சபை' சமரசத்திற்கான தீர்வல்ல, ஈழ மக்களின் பிரச்சினைக்கான தீர்வுமல்ல என்பதை தெளிவு படுத்தியது நல்லது.

கருணாநிதி. சென்னை. 17

இருளைத் துடைப்பது மட்டுமல்ல அதன் முகத்தையே மாற்றுவது என்ற கருத்து என்றும் நினைவில் தங்கும். 'புரட்சி'யின் விளக்கமாக கவிதை அமைந்திருந்தது மேலும் சிறப்பு.




ஏ. தியாகராஜன்.
துரைப்பாக்கம்.

'விமர்சிப்போம்' வெறும் வாசகர் கடிதப்பகுதியாக இல்லாமல் மாற்றுக் கருத்தின் மேடையாக ஒலிப்பது மகிழ்ச்சியைத் தந்தது.

ச. சிவராமன். திண்டுக்கல்

'பெரு நாட்டில் ஒளிரும் பாதை' மேலும் கூடுதலாக தகவல்களைத் தருவதாக அமைந்திருக்க வேண்டும்.

பெரு நாடு பூமிப்பந்தில் எந்த இடத்தில் இருக்கிறது என்பதையும் எழுதியிருக்க வேண்டும்.

எஸ். நாகராஜன். பெங்களூர்.

'தமிழர்களின் தாயகமாக 'விழித்தெழும் மலையகம்' வடக்கு, கிழக்கு, மலையகம் தமிழர்களின் தாயகமாக அமையும் நாள் தொலைவில் இல்லை.

நா. மனோகரன். தேனி.

'பாலம்' மேலும் புதிய கருத்துக்களின் பொழிலாக மாற வேண்டும். எளிமை இன்னும் வேண்டும்.

திருநாவுக்கரசு. அரக்கோணம்

"பாலம்" இதழ் தொடர்ந்து ஈழ மக்கள் போராட்டத்தை விளக்கும் கேடயமாக இருக்க வேண்டும்.


ராஜ்மோகன், ராமேஸ்வரம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தோல்வியோடு திரும்பேன்



உங்களுக்குத் தெரியும்.

'சே' இந்த ஒலிகுறிப்பு எத்தனை அர்த்தத்தை வழங்கும் என்பதை. வியப்பு,சந்தோஷம், நேர்மை, அங்கீகாரம், அல்லது ஆட்சேபம் இவையாவற்றையும் ஒருங்கே 'சே' என்ற ஒரே எழுத்து உள்ளடக்கி கொள்ளும்.

அந்த வியப்பு கலந்த குறியீட்டுச் சொல்மேல் தங்களுக்கு இருந்த ஈடுபாட்டை எடுத்துரைக்கும் வண்ணமாக எர்னஸ்டோவின் மகன் எர்னஸ்டோ குவேராவை 'சே' என புரட்சியாளர்கள் அழைத்தனர்.

'சே' 1928-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ஆம் தேதி பிறந்தார். 'சே' யின் தாய் சிலியா, 'சே'யின் தந்தையை கௌரவிக்கும் பொருட்டு எர்னஸ்டோ என்று பெயர் சூட்டினர்.

சேயின் பெற்றோர் டேட்டி என்ற செல்லப் பெயரிலேயே வீட்டில் அழைத்தனர். 'சே' யிக்கு இரு சகோதரிகளும் இரு சகோதரர்களும் இருந்தனர்.

'டேட்டி' எனப்படும் சே இளமையிலிருந்தே ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டார்.

அவருடைய உடல்நிலை, பள்ளிக் கூடத்தில் சேருவதற்குக் கூட இயலாத நிலையிலிருந்தது. இரண்டு வருடங்கள் வீட்டில் இருந்தபடியே கல்வி கற்றார் சே. நான்காவது வயதிலேயே சே கல்வி கற்பதை தொடங்கினர்.

இளம் பருவத்தில் கல்வி பயிலத் தொடங்கிய 'சே' போராளியாய் அலைந்து திரிந்து போராடிய போதும் சரி, ஆஸ்துமாவால் அவதிப்பட்டபோதும் சரி எந்தப் புத்தகத்தையாவது படித்துக் கொண்டே இருக்கும் பழக்கத்தை கடைபிடித்து வந்தார்.

எல்லோருக்கும் விருப்பமான எழுத்தாளர்கள் இருப்பது போல சேகுவராவுக்கும் விருப்பமான எழுத்தாளர்கள் உண்டு.

சேகுவரா வீட்டில் பெரிய நூலகம் இருந்த காரணத்தால் அவருடைய படிப்பார்வம் கடலில் நீந்தும் மீனைப்போல துள்ளித் திரிந்தது.

அவருடைய வீட்டு நூலகத்தில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் நூல்களும் இடம் பெற்றிருந்தன. பிரெஞ்சு மொழியில் கூட புத்தகங்கள் இருந்தன. சேயின் தாய் சிலியாவுக்கு பிரெஞ்சு மொழி தெரியும் தான்கற்ற மொழியை சேகுவராவுக்கும் கற்றுத் தந்தார்.

சேகுவராவின் இளமை காலத்தில் பிடித்தமான எழுத்தாளர்கள் விக்டர், ஹியூகோ, டூமாஸ், ஜாக்லண்டன் ஆகியோராவர்.

அதே காலத்தில் டால்ஸ்டாய், டாஸ்டாய்வ்கி, கார்க்கி ஆகியோரையும் விரும்பி படித்தார்.

லத்தீன் அமெரிக்கச் சமூக நாவல்களைப் படித்தார். எஸ்டேட்டுகளிலும், தோட்டங்களிலும், அடிமைகளாக வாழ்ந்த தொழிலாளர்களின் இந்தியர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துக்காட்டிய சீரோ அலிகிரியா, ஜார்ஜ் ஜகாஸா (ஈக்வடார்) ஜோஸ் எஸ்டானியோ ரிவேரோ (கொலம்பியோ) ஆகியோர் நாவல்களைப் படித்தார்.

பாப்லோ நெருடாவின் பல கவிதைகளை 'சே' மனப்பாடமாக்கி வைத்திருந்தார்.

கவிதை எழுதுவதில் கூட ஆர்வம் செலுத்தினர். ஆனால் ஒருபோதும் தன்னைக் கவிஞராக கருதிக் கொண்டதில்லை.

'பிற்காலத்தில் ஒருபோதும் கவிஞனாக முடியாத புரட்சிக்காரன்' என்று அழைத்துக் கொண்டதிலிருந்தே இது தெரியும்.

1950ம் ஆண்டு, மே 5ஆம் தேதி எல்கிராஃபிகோ எனும் பத்திரிக்கையில் ஒரு விளம்பரம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1950ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி செனேரெஸ், மிக்ரோன் மொபெட் ஃபார்மின் பிரதிநிதியான நான் உங்களுக்கு நீங்கள் வலம் வருவதற்காக ஒரு மிக்ரோன் மொபெட்டை அனுப்புகிறேன். நான் இதில் சவாரி செய்து அர்ஜெண்டைனாவின் பன்னிரண்டு மாநிலங்களில் 4000 கிலோமீட்டர் பயணம் செய்தேன். அந்தப் பயணம் முழுவதும் இந்த மொபெட் எவ்வித தடங்கலுமின்றி வேலை செய்தது. இதில் ஒரு குறையைக் கூட என்னால் கண்டு பிடிக்க இயலவில்லை. இதில் பயணம் செய்ததன் மூலமாகக் கிளம்பியபோது இருந்த நிலைமையிலே திரும்பி வந்து சேர்ந்தேன் என உறுதி அளிக்கிறேன். இப்படிக்கு எர்னஸ்டோகுவேரா செர்னு

எர்னஸ்டோகுவேராசெர்னு வேறுயாருமில்லை. அவர் 'சே' தான். சே மாணவராக இருந்த போது மிக்ரன் கம்பெனி விளம்பரத்திற்காக ஒரு மொபெட்டையும் தந்து கொஞ்சம் பணமும் கொடுத்தார்கள். எனவே 4000 கிலோமீட்டர் பயணம் சாதனையானது.

மாணவராக இருந்தபோது ஒருபோதும் சோம்பி இருந்ததில்லை. ஒரு சமயம் கப்பலில் மாலுமியாகப் பணியாற்றினர்.

வேறு ஒரு சூழ்நிலையில் தென் அமெரிக்காவின் பாதிப் பகுதியை நடந்தே சுற்றிப் பார்த்தார்.

'டேட்டி'யின் அபாயகரமான முயற்சிகள் அவரது



இளமையில் 'சே'

□

பெற்றோரை கவலைப்பட வைத்தாலும் அவர்கள் தங்களுடைய கவலையை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டதில்லை. ஏன் என்றால் குழந்தைகளின் இளமைப் பருவ மனோபாவத்திற்கு குறுக்கே நிற்க அவர்கள் விரும்பவில்லை.

சேகுவராவுக்கு அப்போது வயது பதினொன்று. அவர் தம்பி ராபர்ட்டோவுக்கு வயது எட்டு. திடீரென்று இருவரையும் காணவில்லை.

வழி தவறி வேறு எங்கும் சென்றிருப்பார்களோ என்ற கவலையில் சுற்றுப்புறம் எங்கேயும் தேடிவிட்டார்கள். ஆனால் குழந்தைகள் கிடைத்த பாடில்லை

காவல்துறையினரிடம் புகார் செய்து விட்டார்கள். கடைசியில் 800 கிலோமீட்டருக்கு அப்பால் கண்டு பிடிக்கப்பட்டனர்.

தென் அமெரிக்காவில் நடந்தே சுற்றுப் பயணம் செய்தபோது சேகுவராவிற்கு கிடைத்த அனுபவம் வினோதமானதாகும்.

பெருவில் சேயும், சேயின் நண்பன் கிரெனேடோசும் ஒரு காட்டாற்று வெள்ளத்தில் பயணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. குஷ்டரோகிகள் வழங்கிய தெப்பத்தில் பயணம் செய்தனர்.

அங்கிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் சே குறிப்பிட்டிருந்த சுவையான விவரம் வருமாறு.

இன்னும் ஒரு மாதத்திற்குள் என்னிடமிருந்து கடிதம் வரவில்லை என்றால் நாங்கள் முதலைகளுக்கு இரையாகிப்போனோம் என்றோ, ஜுப்ரோ இந்தியர்களுக்கு உணவாகப் பரிமாறப்பட வெட்டியெடுக்கப்பட்ட எங்களது தலைகள் அமெரிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களால் விற்கப்பட்டு விட்டன என்றோ, யூகம் செய்து கொள்ளுங்கள். அங்ஙனம் ஏதும் நடந்தால் நீங்கள் எங்களது பாடம் செய்யப்பட்டத் தலைகளை நியூயார்க் நகரில் அழகுப் பொருட்கள் விற்கப்படும் கடைகளில் பார்த்துக் கொள்ளுங்கள்.

கடிதம் கிடைத்ததும் 'சே' பெற்றோர்கள் சேயின் வழக்கமான குறும்பை எண்ணி சிரித்தார்கள்.

(தொடரும்)

ஆசிரியரும் வெளியிடுபவரும் இரா. திரவியம், 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், சென்னை-20
அச்சிடுபவர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், அடையாறு, சென்னை-20.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில வரிகளில் -செய்திகள்



நவம்பர் 17-ல் தமிழகம் முழுவதிலும் தடையை மீறி, பல ஊர்களில் ஜெயவர்த்தனே கொடும்பாவியை எரித்ததில் 1000 பேர் தமிழகப் போலீசாரால் கைதுசெய்யப்பட்டனர். ஜெயவர்த்தனேயின் கொடும்பாவியைக் கொளுத்தும்படி திராவிடர்கழகப் பொதுசெயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார். தி.க. மகளிர் அணி அமைப்பாளர் பார்வதி தலைமையில் 50 பெண்கள் ஜெயவர்த்தனாவின் கொடும்பாவியைக் கொளுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 3-ல் சென்னை தலைமை செயலகத்தில் ஈழப் போராளித்தலைவர்கள், தமிழக முதல்வரை தனித்தனியாகச் சந்தித்து, கொழும்பின் நகல் திட்டம் பற்றி கருத்துத் தெரிவித்தனர். இதுபற்றி திரு. பண்ருட்டி ராமச்சந்திரன், திரு. பொன்னையன் ஆகியோரிடம் கருத்துக் கேட்ட போது ''போராளிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்தோம். அதை அரசு பரிசீலிக்கும், ஒவ்வொரு அணியினரும் நகல் அறிக்கை குறித்த தங்களுடைய கருத்துக்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்'' என்று கூறினர்.

நவம்பர் 4: EPRLF அறிக்கை சென்னையில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தை நாங்கள் நியாயப்படுத்தவில்லை. ஆயுதம் இல்லாமல் நின்று கொண்டு இருந்த பொது மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டது சரியானதல்ல. இதற்காக தமிழ்நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறோம். நடந்த சம்பவத்திற்கு தமது இயக்கம் விசாரணை நடத்த இருக்கிறது. அதற்கு அதிகாரிகள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். துப்பாக்கிச் சூடு ஏன் நடந்தது என்பதை கண்டறிய இந்திய அரசும் **பாரபட்சம் இல்லாத முறையில் நீதி விசாரணை நடத்த வேண்டும்.** அப்போது பல உண்மைகள் தெரியவரும்.

நவம்பர் 8 ''தமிழகத்திலிருந்து கொண்டு, போராளிகள் இயங்கி வருவதை தாம் 1983ஆம் ஆண்டிலேயேக் கூறியதாகவும், அப்போதே தமிழக அரசு போராளிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தால் இனப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும்'' என்று கொழும்பில் திரு. பிரேமதாசா கூறினார்.

நவம்பர் 8 போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தும், போராளித் தலைவர்களான ஈரோஸ், வி. பாலகுமார், டெலோ செல்வம், புலி பிரபாகரன் ஆகியோரை வீட்டுக் காவலில் வைத்தும் செயல்பட்ட தமிழக அரசு, 14-11-86 காலையில் வீட்டுக் காவலை விலக்கியது.

நவம்பர் 11 ஈரோஸ் அறிக்கை: ''கடந்த 8ஆம் தேதி அன்று தமிழக போலீசார் எம்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆழ்ந்த வருத்தத்தை தருவதாக அமைந்துள்ளது. பாதுகாப்புத் தேடி இங்கு வந்த எம்மை தமிழக போலிசார் பாதுகாப்பு அற்றோராகச் செய்துள்ளனர். குறிப்பாக ஈரோஸ் இயக்கமானது தமிழ்நாட்டில் சட்டம் அமைதியைக் குறிக்கும் வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டதென்று எவரும் குற்றம் சாட்ட முடியாது. தமிழ்நாட்டில் எம்மைத் தொல்லையானவர்கள் எனக் கருதினால், நாம் விரும்பப்படாதவர்கள் அல்லது வேண்டப்படாதவர்கள் எனத் தமிழ்நாடு அரசு கருதினால் அதனை எமக்கு அறிவிப்பின், இதுவரை எமது உயிரைப் பாதுகாப்பதற்கு செய்த உதவிகளுக்கு நன்றி கூறி நாம் விடை பெறத் தயாராக உள்ளோம் - இதற்காக மறைமுகமான அச்சுறுத்தல்கள் தேவையில்லை''.

□ வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் ராணுவ முகாமில் இருந்து ஆலங்குளம் இராணுவ முகாமுக்கு சிங்கள இராணுவத்தினர் 'டிரக்' வண்டியில் சென்று கொண்டு இருந்தனர். பெரியகட்டு, புளியங்குளம் ஆகிய இடத்திற்கு இராணுவத்தினர் வந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகளினால் கண்ணி வெடியின் மூலம் தாக்கப்பட்டு 18 பேர் கொல்லப்பட்டனர். டிரக்வண்டி முழுவதும் சுக்கு நூறானது.

நவம்பர் 16. திருக்கோணமலை அருகே மூதூரில் 7 தமிழ் போராளிகள் போலீசாரால் கடற்பயணத்தின் போது சுட்டுக் கொல்லப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டனர். மேலும் அக்கரைப்பற்று கிராமம் அருகே மூன்று தமிழ்ப் போராளிகளை இலங்கை அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்றனர். இவர்களில் மனோகரன் என்பவர் ஈழப் புரட்சி அமைப்பின் உள்ளூர் தலைவர் ஆவார்.

நவம்பர் 16 - இலங்கையின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ராணுவத்தினரால் கடந்த அக்டோபரில் கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 50 தமிழர்களைக் காணவில்லையென தமிழ்த் தகவல் மையம் கூறுகிறது. கைது செய்யப்பட்டோரைப் பற்றி, உறவினர்கள் ராணுவத்திடம் விசாரித்தபோது ''நாங்கள் கைது செய்யவேயில்லை' என மறுத்துவிட்டார்களாம், சிலரை சுட்டுக் கொன்றுவிட்டு ''தமிழ்ப் போராளிகள்'' என முத்திரை குத்தினார்களாம்.

நவம்பர் 13 : ''ஈழப் போராளித் தலைவர்களை வீட்டுக் காவலில் வைக்க உத்தரவிட்ட மத்திய அரசின் நடவடிக்கைகள் ஈழத்தமிழருக்கு இழைத்த மன்னிக்க முடியாத செயலாகும். தமிழ் இனத்தையே அழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று ஜெயவர்த்தனே யுத்தப் பிரகடனமே செய்துவிட்டார், இச் சூழ்நிலையில் ஜெயவர்த்தனேயின் கொலைக் கரங்களை வலுப்படுத்தும் வகையில் ராஜீவ் காந்தியின் அரசு இலங்கைத் தமிழர்களின் இயக்கத் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்து அவமானப்படுத்தியுள்ளது. பெங்களூரில் நடைபெறுகின்ற தெற்கு ஆசிய மண்டல மாநாட்டிற்கு வரும் ஜெயவர்த்தனேக்குக் கோலாகல வரவேற்புக் கொடுக்கவே தமிழர்களுக்கு எதிராக இந்தக் கொடுமையைச் செய்துள்ளீர்கள். தமிழர்களின் ரத்தம் தோய்ந்த கரங்களுடன் வரும் ஜெயவர்த்தனேயுடன் கைகுலுக்கவே இந்தத் துரோகத்தைச் செய்துள்ளீர்கள்'' - —பாராளுமன்றத்தில் வை.கோபால்சாமி உரை.

நவம்பர் 14 : மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலை என்ற இடத்தில் இலங்கை ஊர்க் காவல் படையினரால் 16 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். திருகோணமலை மாவட்டம் கங்கன்குழி என்ற இடத்தில் 15 அப்பாவித் தமிழர்களை இராணுவத்தினர் பலவந்தமாக அழைத்துச் சென்றனர். அவர்களின் கதி தெரியவில்லை.

☐ பருத்தித் துறையில், ராணுவத்தினருக்கு எதிராக நடைபெற்ற சண்டையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தளபதி கிட்டுவும், அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபன் அமிர்தலிங்கமும் காயமடைந்தனர்.

நவம்பர் 8 : தலைமன்னார் கடற்கரையில் 17 தமிழர் சடலங்கள் ஒதுங்கின. அவை இந்தியாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த தமிழ் அகதிகளின் சடலங்களாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

நவம்பர் 12 : இலங்கை வரலாற்றில் இது வரை இல்லாத அளவிற்கு 1248 கோடி ரூபாய்க்கு துண்டு விழுந்துள்ளது. 1987 - ஆம் ஆண்டில் இலங்கையின் வருமானம் 1788 கோடியாகவும், செலவு 3036, கோடியாகவும் இருக்குமெனவும் நிதியமைச்சர் ரொனி டி. மெல் கூறினார்.

நவம்பர் 8: இந்தியாவிற்குகடந்த 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்து இருபத்து எட்டு ஐநூறு (1,28,500) பேர் அகதியாக வந்துள்ளனர். இதில் 1,23,390 இலங்கையில் இருந்து அகதிகளாக வந்தவர்கள் அவர்களுக்காக இந்திய அரசு இதுவரை ரூ. 10 கோடி செலவழித்துள்ளது-

—பாராளுமன்றத்தில் அமைச்சர் பூட்டாசிங்

1948 நவம்பர் 15-ல் ஈழ மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்ட நினைவு நாள் பொதுக் கூட்டம் 14-11-86-ல் காஞ்சிபுரம் நகரில் ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப்பு சங்கம் சார்பில் இரட்டை மண்டபத்தில் க. கோதண்டன் தலைமையில் நடைபெற்றது. அமைப்புச் சங்கத் தலைவர் தேவதாஸ் வரவேற்புரை கூற, காஞ்சி கலைக் குழுவினர் மலையகத் தமிழரைப் பற்றியப் பாடல்கள் பாடினர். கூட்டத்தில் ஈரோஸ் நிறுவனர் தோழர் இ, இரத்தின சபாபதி சிறப்புரையாற்றினர். மற்றும் மு. மூர்த்தி, கவிஞர் ஜீவிதன், ஆர். ஜானகிராமன், விஜயசாரதி, கருப்பையா, ராமகிருஷ்ணன், ஜார்ஜ் நீலாவதி ஆகியோர் பேசினர். மா. முத்துக்குமார் நன்றி கூறினர்.

சென்னையில், 15-11-86 அன்று ஈழப் புரட்சி அமைப்பின் சார்பில் 'நாட்டற்றவர்' தினம் நினைவு கூறப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் ரவி வரவேற்புரை கூற எழில் இளங்கோவன் தலைமை தாங்கினர். கூட்டத்தில் பேராசிரியர் பெரியார்தாசன், கவிஞர் இளவேனில், ஜெயபால், இரா. திரவியம் ஆகியோர் பேசினர்.

திருச்சி மாவட்ட ஈழ நண்பர் கழகம் சார்பாக, திருச்சி மன்னார்புரத்தில் 16-11-'87 அன்று ஈழ மலையகத் தமிழரின் குடியுரிமை பறிப்பு நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவரங்கம் கண்ணன் தலைமை தாங்க, பேராசிரியர் திருமாறன், பேராசிரியர் சண்முகசுந்தரம், முகிலன், அவையரசி, செகா ஆகியோர் உரையாற்றினர். ஈழப் புரட்சி அமைப்பைச் சேர்ந்த தோழர் பத்மன் சிறப்புரையாற்ற, தோழர் சுந்தரம் நன்றியுரை கூற கூட்டம் நிறைவு பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் நிலை இப்படி . . .

# போராளிகள் அணி மீது எடுத்த நடவடிக்கை

# இலங்கை ராணுவத்தோடு சேர்ந்து எடுக்கப்பட்டதே

கலைஞருடைய மன ஆதங்கம் எங்களுக்குப் புரிகிறது. அவர் மௌனம் சாதித்த போதும் ஈழப்பிரச்சினையை தி.மு.க கைவிட்டதாகக் கருதக்கூடாது என்றே சொல்லியிருக்கிறார். நிச்சயமாகப் பிரச்சினைத் தீவிரம் அடையும் போது கலைஞர் கட்டாயம் மௌனம் கலைந்து செயல்படுவார் என்று நம்புகிறோம்.

ஒரு விஷயம் தனிநபர் ஒருவருடைய அறிக்கைகளை வைத்து ஈழப் போராட்டம் பற்றிய முடிவுக்கு வந்து விடக்கூடாது என்று கலைஞர் அவர்களைத் தமிழ் மக்கள் சார்பாக இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம். ஏன் என்றால் ஈழப் போராட்டம் எங்களைப் பொறுத்த மட்டில் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது. இன்னும் எத்தனையோ கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது.

இன்றுள்ள நிலையை வைத்து எதிர் காலத்தில் யார் பதவிக்கு வருவார் என்பது முக்கியமல்ல. அல்லலுறும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கான முடிவை நோக்கிச் செயல்படுவதே முக்கியமானப் பிரச்சினை. கலைஞருடைய மனம் புண்பட்டிருந்தால் அதற்காக வருத்தம் தெரிவிக்கத்தயாராகவுள்ளோம். இதுவரை எங்களுக்குத் தோள் கொடுத்த கலைஞர் அதே உற்சாகத்தோடு செயல்பட வேண்டுமென்று 40 லட்சம் தமிழர் குரலாகக் கேட்டுக் கொள்கிறோம்.

—பாலக்குமார்

'தராசு' இதழ் பேட்டியில்.

சிங்கள அரசு எதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுகூறுகிறதோ அதைப் போராளிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்காக மத்திய அரசு, மாநில அரசைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு நடத்துகிற செயல் இது.

அடைக்கலம் என்று வந்தவர்களுக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருக்கலாம்.

மாநில அரசுமீது மத்திய அரசு பழிசுமத்தியும் மாநில அரசு தனக்கு எதுவுமே தெரியாது என்பதுபோல மாநிலப் போலீசார் மீது பொறுப்பைத் தூக்கிப் போட்டும் ஒரு நாடகமே நடத்தி முடித்துள்ளார்கள்
—கலைஞர். மு. கருணாநிதி

இது வரை இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவின் யோசனைகளை எங்களிடம் எடுத்துக்கூறி அவற்றுக்காக எங்களிடமிருந்து கருத்துக் கேட்டிருக்கிறார்களே தவிர எங்களது (போராளிகளின்) யோசனைகளை ஜெயவர்த்தனாவிடம் எடுத்துக் கூறி அதற்கான பதில்களை இந்திய அரசு பெறுவதில்லை. இரண்டு தரப்புக் கருத்துக்களையும் கேட்பதில்லை. இது மத்தியஸ்தம் செய்வதற்கான நல்லெண்ணத்தின் அடையாளம் அல்ல மத்தியஸ்தம் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.
—பிரபாகரன்

தமிழக போலீஸ் இங்குள்ள இலங்கைத் தமிழ்ப் போராளி அணிகள் மீது எடுத்துள்ள நடவடிக்கை இலங்கை ராணுவத்தோடு சேர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைப் போன்று தோன்றுகிறது.

—எம். கல்யாண சுந்தரம்
கம்யூனிஸ்ட் கட்சி

பல்வேறு போராளி குழுக்களிடையே ஒற்றுமை உண்டாக்க எமது கட்சி முயற்சிகள் செய்தது. என்றும் ஆனால் இக்குழுக்களோ தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு போட்டிக் குழுக்களை அழிக்க முயற்சி செய்தன போராளி இயக்கங்களின் இந்த மனப்பான்மை தி.மு.க. வுக்குக் கவலை யூட்டியது.

ஈழ நாடு என்பது உண்மையில் அமைந்தால் அங்கு ஜனநாயகம் இராதென எல்.டி.டி.இ தலைவர் பிரபாகரன் கருத்துத் தெரிவித்ததை தி.மு.க. மன்னிக்கவே முடியாது.

மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் முயற்சிகள் எடுத்து வருவதால் தி.மு.க. எந்தப் பிரச்சினைகளையும் எழுப்ப விரும்பவில்லை. தி.மு.க. மௌனமாக இருப்பதற்கு இது எல்லாம் காரணங்களாகும்.

கலைஞர் கருணாநிதி மதுரையில் நிருபர்களிடம் பேட்டி. நவம்பர் 14. தினமணி.

மத்திய அரசு போராளிகளிடம் இது போன்று இனி நடந்து கொள்ளக் கூடாது. தற்போது இதனால் இலங்கை அரசுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்த நாட்டில் மேலும் தமிழர்களை கொலை செய்ய இந்த நடவடிக்கை ஏதுவாக அமையக் கூடும்.

கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான போராளிகளின் தலைவர்கள் அ.தி.மு.க. அரசினால் அவமானப் படுத்தப் பட்டுள்ளனர். மத்திய அரசுக்குத் தெரியாமல் இவ்வாறு நடக்காது.

—உபேந்திரா, தெலுங்கு தேசம் கட்சி ராஜ்ய சபையில் பேச்சு. நவம்பர் 10.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்

# அடிச்சுவட்டில் நானும்

எங்கள் திருமணத்தை ஏன் ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தார் என்பதை இப்பொழுது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அப்பொழுது அதை வேறுவிதமாக, என்னைக் கைவிட்டு விடுவதற்கான தந்திரம் என்று சந்தேகப்பட்டதுண்டு. நானே அழைப்பு அனுப்ப வேண்டியிருந்தது. திருமணம் மேலும் மேலும் ஒத்திப்போடப்பட்டுக் கொண்டே போனால் எல்லோரும் என்ன நினைப்பார்கள்? அதனை நான் கடுமையாக ஆட்சேபித்தபோது, எனக்குப் புரியவைக்க முடியாமல் போய், நீண்டநேரம் பேசாமல் உட்கார்ந்திருக்கிறார்.

அப்பொழுது சொன்னார் :

''எப்படி என்னால் உனக்குப் புரிய வைக்க முடியுமோ தெரியவில்லையே? சரி. திட்டமிட்டபடியே திருமணத்தை நடத்தி விடுவோம். ஆனால் தயவு செய்து என்னை மிகவும் மோசமாகக் கணக்குப் போட்டு விடாதே. உன்னைக் கைவிட வேண்டுமென்று என்றைக்கும் நினைத்ததில்லை. உன்னை மிக ஆழமாகக் காதலிக்கிறேன். நீயோ இப்பொழுது என்மீது கோபப்படுகிறாய், ஆனால் ஒரு நாளைக்கு என்னைப் புரிந்து கொள்வாய்.''

கடைசியில் நான் அவரைப் புரிந்து கொண்டு விட்டேன். இப்பொழுது அவர் கைது செய்யப்பட்டு விட்டார். அறையின் மூலையில் உட்கார்ந்துகொண்டு அடக்க முடியாமல் குமுறிக் குமுறி அழுதேன்.

போலீஸ்காரர்கள், வெடி குண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவிகளைக் கொண்டு வெகு நேரம் வீடு முழுவதையும், முற்றத்தையும் சோதனை செய்தார்கள். ஆனால் அவர்களால் ஒன்றைக்கூட கண்டு எடுக்க முடியவில்லை. பிறகு அவர்கள் அறைக்குள்ளே கூடினார்கள். ட்ராயைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டார்கள் அவர்களுடைய கமாண்டர் என்னை நோக்கி,

''உன்னுடைய கணவன் ஏதேனும் வெடிகுண்டுகள் எங்காவது ஒளித்து வைத்திருக்கிறானா? உனக்குத் தெரியுமா? எப்பொழுதாவது, எதையாவது வீட்டில் ஒளித்து வைப்பதைப் பார்த்திருக்கிறாயா?'' என்றான்.

நான் அழத் தொடங்கிவிட்டேன். அழுதுகொண்டே ''என்னுடைய கணவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது எதுவும் எனக்குத் தெரியாது. அவர் எதையுமே ஒளித்துவைப்பதை நான் பார்த்ததே கிடையாது'' என்றேன்.

''நீ உண்மையைச் சொல்லவில்லை என்றால், உன் கணவனை இதே அறையிலேயே சாகும் வரை அடித்து நொறுக்கிவிடுவேன்.''

''எனக்குத் தெரியாத ஒன்றை என்னால் எப்படிச் சொல்ல முடியும்?''

அவன் ட்ராயை நோக்கி, ''அந்த வெடிகுண்டுகளை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் என்பதை நீ சொல்லிவிட்டால், இந்த அறை உங்கள் இருவருக்கும் காதற் கூண்டாக இருக்கும். இல்லை இப்படியே உண்மை சொல்ல மறுத்து வந்தால் இந்த அறையே சித்திர வதைக் கூடமாகும், இதிலேயே நீ சாக நேரிடும்.''

''வெடிகுண்டுகள் எங்கே இருக்கின்றன என்பது தெரியாது''

போலீஸ் கும்பல் ட்ராயிடம் ஓடி மாறி மாறி அடித்தார்கள், பிறகு மின்சாரத்தினால் 'ஷாக்' அடிக்க விட்டார்கள். அந்தத் தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமாக இருந்தது; அவர் படுக்கையில் துடித்து துடித்து விழுந்ததிலிருந்து தெரிந்தது. அதற்கு மேலும் என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. என் இதயத்திலிருந்து கொஞ்ச நஞ்ச பயமும் தூரவிலகி ஓடிவிட்டது. அந்தக் கும்பலிடையே ஓடி, அவர்களைத் தடுக்க முயன்றேன். என்னை ஒரு முரடன் பிடித்துக் கொண்டான். அவன் தனது முரட்டுத்தனமான கரங்களால் என் இரு தோள்களையும் பிடித்து, அழுத்தி ஒரு நாற்காலியில் உட்காரவைத்து, நெடுமரமாக நின்று கொண்டான். நான் கூச்சல் போடத் தொடங்கினேன். அவர்களோ தங்களது துப்பாக்கிச் சனியனை எனக்கு நேராக நீட்டிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் சித்திர வதையை நிறுத்திவிட்டு ட்ராயை மீண்டும் கேட்டார்கள்.

பான் தி குயென்

தமிழில் : தா. பொன்னிவளவன்

அமெரிக்க ஏகாதிபத்தின் அடக்குமுறைக்கும் சித்ர வதைகளுக்கும் எதிராக, தாயக விடுதலைக்காகப் போராடிய வியத்நாமின் மாபெரும் வீரன் நகூயென் வான் ட்ராயின் வீர காவியத்தை அவர் மனைவி பான்–தி-குயென் அவர்களே எழுதியிருக்கிறார்,

(சென்ற இதழ் தொடர்ச்சி)

□ □

''வெடிகுண்டுகள் எங்கே இருக்கின்றன?'' ட்ராய் மிகுந்த வேதனையோடு, ஆனால் முன்னைக் காட்டிலும் உரத்த குரலில்,

''எனக்குத் தெரியாது என்று முன்பே சொல்லி விட்டேன். இன்னும் அதையே கேட்டால் சொல்கிறேன். எங்கெல்லாம் அமெரிக்க வெறியர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் வெடிகுண்டுகள் இருக்கின்றன. போங்கள்!''

இந்த முறை போலீஸ் கமாண்டர் தானே அடிக்கத் தொடங்கினான். போலீஸிடம் ஒரு கைத்தடியைப் பறித்து சரமாரியாக, மழைபோல் விளாசித் தள்ளினான். உடலில் அடி விழாத இடமே பாக்கி இல்லை, ஒவ்வொரு முறையும் அடித்து முடித்து விட்டு அதே கேள்வியைக் கேட்டார்கள். ஒரு வார்த்தையைக்கூட ட்ராயிடமிருந்து பெறுமலேயே ஒரு மணி நேரம் கழிந்து விட்டது. கமாண்டர் ட்ராயை அப்புறப்படுத்தும்படி தனது போலீசுக்கு உத்தரவிட்டான். மிகுந்த முயற்சி செய்து எழுந்து நின்ற ட்ராய் பலமான குரலில் என்னை நோக்கி, ''கவலைப் படாதே குயென். தம்முடைய ஒன்றுவிட்ட சகோதரனும் நீயும் எப்படியாவது நிலைமையைச் சமாளியுங்கள்'' என்று கூறினார்.

அவருடைய சட்டை கந்தல் கந்தலாகக் கிழிந்து தொங்கியது. ஒரு பித்தான்கூட சட்டையில் இல்லை. முகம், நெஞ்சு எல்லாப் பகுதியிலும் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. வாயிலை நோக்கி மெல்ல அடி எடுத்து வைத்துக் கொண்டே என்னையே தீர்க்கமாகப் பார்த்து முகத்தில் புன்னகையை வரவழைக்க முயன்றார்.

என்னைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த போலீசாரிடமிருந்து விடுபட்டு, என் கணவரின் அருகில் செல்ல போராடிப் பார்த்தேன். அந்த முரடர்கள் என் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருந்தபோதும், உரக்கச் சத்தம் போட்டு ''ட்ராய்! உங்களை அளவு கடந்து நேசிக்கிறேன். உங்களை என்றும் காதலிப்பேன்'' என்று கூவினேன்.

கமாண்டர் என்பக்கம் திரும்பி ''காதல், இரக்கம் எல்லாவற்றையும் மறந்துவிடு. வேறொரு கணவனைத் தேடிக்கொள். இவன் செய்த குற்றத்திற்காக இவன் சாக வேண்டியவன்தான்'' என்றான்.

அதேநாள் இரவு, பதினொரு மணி இருக்கலாம், போலீஸ்காரர்கள் திரும்பவும் வந்தார்கள். ''உன்னை உன் கணவன் உடனே பார்க்க வேண்டும் என்று கூறுகிறான்'' என்றார்கள்.

இதனைக் கேட்டவுடன், அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உந்த அவர்களுடைய காருக்கு ஓடினேன். அவர்கள் ட்ராயை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தால், அவரைக் கவனித்துக் கொள்ளவும், அவருக்கு உணவு கொண்டு போகவும் முடிந்திருக்கும். ஆனால் எதுவுமே என்னிடம் தெரிவிக்கவில்லை. சிறிது நேரத்தில், ஒரு சிறு சந்திற்குள் காரை ஓட்டிச் சென்றார்கள். அங்கே ஒரு பள்ளிக் கூடத்தில் படிக்கும் மாணவியைக் கைது செய்து அழைத்துக் கொண்டார்கள். எங்கள் இருவரையும் நகரப் போலீஸ் தலைமை நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். அங்குள்ள ''விசாரணை அறையில்'' ட்ராயினுடைய நடவடிக்கைகளோடு அந்தப் பெண்ணும் பங்குப் பெற்றிருப்பதாக சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்டிருப்பதை அறிந்துகொண்டேன். அதே இரவில் நானும் 'விசாரிக்கப்பட்டேன்.' போலீஸ் உயர் அதிகாரி என்னை விசாரித்தார்.

''உன் கணவனுடைய நடவடிக்கைகள் பற்றி ஏதேனும் உனக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''திருமணம் முடிந்து எவ்வளவு நாட்களாகிறது?''

''சரியாகப் பத்தொன்பது நாட்கள்!''

''ட்ராயையும், உன்னையும் போன்ற புதிய இளம் தம்பதிகளுக்கு வாழ்க்கையிலேயே மகிழ்ச்சிகரமான அருமையான நாட்கள் இதுவாகத்தான் இருக்க முடியும் என்று உணருகிறாயல்லவா?''

''ஆமாம் .... அப்படித்தான் உணர்கிறேன்!''

''நல்லது! ஒன்றைக்கூட மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லி விட்டால், இந்த அருமையான, மகிழ்ச்சிகரமான நாட்கள் இத்தோடு முடிந்து விடாது....''

www.tamilarangam.net



## 'எங்கெல்லாம் அமெரிக்க வெறியர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் வெடிகுண்டுகள் இருக்கின்றன'

அவன் இடைவெளியிட்டு, கொட்டாவி விட்டுக்கொண்டே நாற்காலியில் சாய்ந்து கொண்டான். அவன் எலிமூஞ்சி போன்ற முகத்தழகன். கஞ்சா குடிக்கிறவனைப் போன்ற பாவனையில் இருந்தான். மேலும் தொடர்ந்தான்....

''அடிக்கடி ட்ராய் யாரைப் பார்க்கச் செல்வான்?

''நாள் முழுக்க அவர் வேலை செய்வார். சில சமயங்களில் மாலை நேரங்களிலும் வேலை செய்வார். அவர் வெளியே செல்வதே ரொம்பவும் அரிது. எப்பொழுதாவது தெருவைச் சுற்றிச் சுற்றி வருவார். அடிக்கடி அவர் யாரைச் சந்திப்பார் என்று எனக்குத் தெரியாது.''

''யாராவது அடிக்கடி அவனைச் சந்திக்க வருவார்களா?''

''எப்பொழுதோ ஒருமுறை.... அவர்கள் வாத்தியம் இசைப்பார்கள், அல்லது பாடுவார்கள், அல்லது அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வேலைகளைச் செய்வார்கள். அவருக்கு வாழ்க்கைப்பட்டு இரு வாரங்கள்தான் ஆகிறது. அவருடைய நண்பர்களைப் பற்றி அதிகம் தெரிந்திருக்க முடியாதல்லவா?''

''நன்றாக யோசித்துப்பார்! உனக்கு என்னவெல்லாம் தெரியுமோ அதையெல்லாம் சொல்லி விடு. ஒன்றை நினைவில் வைத்துக் கொள்! நீ எதையும் மறைக்காமல் சொல்லிவிட்டால், அவன் விடுதலை செய்யப்படுவான். ட்ராயை நான் சந்தித்தேன், இப்பொழுது உன்னைச் சந்திக்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால் நீங்கள் மிக அருமையான தம்பதிகள்! உண்மையிலேயே உங்களுக்காக வருந்துகிறேன்.''

எங்கள் திருமணத்தன்று நானும் ட்ராயும் சேர்ந்து எடுத்துக்கொண்டிருந்த புகைப்படத்தை மேஜைமேல் தூக்கிப் போட்டான். அந்த புகைப்படத்தில் நான் நீல நிறப் பூக்கள் நிறைந்த அழகிய 'கவுன்' அணிந்து, கையில் பெரியதொரு மலர்ச் செண்டு வைத்திருந்தேன். நெருக்கமாக என் ட்ராய் நின்றுகொண்டிருந்தார். அந்தப் போலீஸ் அதிகாரி தனது குரலில் இரக்கத்தை வலிந்து சேர்த்துக்கொண்டு கூறினார்.

''உண்மையிலேயே இத்தகைய இளம் தம்பதிகளை நிரந்தரமாகப் பிரிப்பது என்று எண்ணுகிறபோது எவருடைய இதயத்தையும் சுண்டி இழுக்கவே செய்யும். இந்த உத்யோகத்தில் வெகு காலமாக இருந்து வந்திருக்கிறேன். பல குடும்பங்களின் மகிழ்ச்சியை நான் காப்பாற்றியிருக்கிறேன். நீ என்னை நிச்சயமாக நம்பலாம். நீ மட்டும் ட்ராயுடைய தலைவர்களையும் அவர்களது கூட்டாளிகளையும் கண்டு பிடிக்கவும், வெடி குண்டுகள் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் நாங்கள் அறிந்துகொள்ளவும் உதவி செய்வாயானால் நிச்சயமாக நீயும் ட்ராயும் திரும்பவும் ஒன்று சேர்ந்து வாழலாம்'' என்றான்.

''அவருடைய நடவடிக்கைகளை நான் அறியேன். என்னுடைய தொழிற்சாலையிலும், வீட்டிலும் எனக்குத் தலைக்கு மேலே வேலைகள் இருக்கும். அதற்கே நேரம் போதாது; நான் பணியாற்றும் பருத்தி கம்பளித் தொழிற்சாலைக்கு ஒருமுறை சென்று பாருங்கள்; அப்பொழுது நான் சொல்வது விளங்கும். ஞாயிற்றுக்கிழமைகளில்கூட நான் வேலை செய்தாக வேண்டும். வார நாட்களில் தொடர்ச்சியாக பன்னிரண்டு மணி நேரம் வேலையில் இருப்பேன்.''

என்னையும், அந்தப் பள்ளிக்கூட மாணவியையும் ட்ராயினுடைய தொடர்புகள் பற்றி அறிய அந்தப் போலீஸ் அதிகாரி நீண்டநேரம் விசாரணை செய்தார். நடுச் சாமம் இருக்கும், எங்கள் இருவரையும் 'சித்திரவதை' அறைக்கு அழைத்துச் சென்று, 'சித்திரவதைக் கருவிகளை' மிக அருகில் நின்று பார்க்கும்படி செய்தார்கள். அறையின் மேல் முகட்டிலிருந்து நீண்ட கயிறுகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில்தான் கைதிகளைப் பிணைத்துக் கட்டுவார்கள். உயிரற்ற உடலைக் கட்டி தூக்கி எறிவதற்குக் கெட்டியான கோணிச் சாக்குகள் கிடந்தன. தண்ணீரோடு கலக்கப்பட்ட சோப்புநுரை நிறைந்த தொட்டிகள் இருந்தன. அவற்றைக் கைதிகளுக்கு வலுக்கட்டாயமாக வாய்க்குள் புகட்டுவது; நகக் கண்களுக்குள் பாய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான ஊசிகள்; தண்ணீருக்குள் மூச்சைப் பிடித்து அமுக்குவதற்காகத் தண்ணீர் தொட்டிகள் என்று இன்னும் என்னவெல்லாமோ இருந்தன.

(தொடரும்)

www.tamilarangam.net

## சமூகவியல்

# ஈழத்தமிழ்ச் சமுதாயத்தில் சாதியத்திற்கு எதிரான போராட்டம்

யாழ்ப்பாணத்தில் இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் சாதியமைப்பின் வெளிப்பாட்டுச் சின்னங்களிற் சில காலத்தோடொவ்வாதன வாகையால் கைவிடப்படல் வேண்டுமென்ற சிந்தனையோட்டம் சீர்திருத்தக் கருத்துடைய உயர்சாதி இந்து இளைஞர் மத்தியிலும், தாழ்ந்த சாதியினர் மத்தியிலும் செல்வாக்குப் பெற ஆரம்பித்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தாழ்ந்த சாதியினர் மத்தியில் ஏற்பட்ட சில அபிவிருத்திகள் உயர் சாதியினரது ஏகபோக தராதரச் சின்னங்களாக விளங்கி வந்தவைகளைப் புறக்கணிக்கச் செய்தன. 1844-இல் ஏற்பட்ட சிறைகுடி ஒழிப்பு 1833-இல் ஊழிய முறை ஒழிப்புப் போன்ற சட்ட நடவடிக்கைகளும் கிறிஸ்தவ பாடசாலைகளில் பெற்ற கல்வியும அதன் விளைவாகப் பெற்ற உத்தியோக வாய்ப்புக்கள், பாரம்பரிய தொழில் முறைகளிலிருந்து விலகி அரசாங்க, தனிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டமையும் ஏற்கனவே தாழ்ந்த சாதியினரின் சிலரைப் பொருளாதார ரீதியாகச் சுதந்திரமான வாழ்க்கையை அமைக்க உதவியது. (1) அரசாங்கமும் பொது விடயங்களில் சாதி வேறுபாட்டிற்கு உத்தியோக ரீதியாக அங்கீகாரம் அளிப்பதை நிறுத்திக் கொண்டது. இவைகளின் பெறுபேருகப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைக் கூற்றிலும் இருபதாம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்திலும், தாழ்ந்த சாதியினர் உயர் சாதி மக்களைப் பின்பற்றிப் பிரேதங்களைத் தகனஞ் செய்யவும், பிரேத ஊர்வலத்தின்போது பறைமேளம் அடித்துச் செல்லவும், பாடசாலைகளிலும் போக்குவரத்து வாகனங்களிலும் சரிநிகர் சமானமாக ஆசனங்களில் அமரவும் முற்பட்டனர். தாழ்ந்த சாதியினரது முயற்சிகளும், அவர்களுக்கு ஆதரவாக விளங்கிய முற்போக்குக் கருத்துடைய உயர் சாதி தீவிரவாதிகளினது செய்கைகளும் இயல்பாகவே பழமை போற்றுவோர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

புதிய கருத்துக்கள், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற சாதிக் கலவரங்கள் போன்று, (2) இந்நூற்றுண்டிலும் பெருங்கலவரங்கள் நடைபெற வழிகோலின. சாதி சம்பிரதாயங்களைக் கைவிட முயன்ற தாழ்ந்த சாதியினரைத் தண்டிப்பதற்கு வேளாளர் மாத்திரம் முனையவில்லை. ஏனைய சாதியினரும் தமக்குக் குறைவான படிநிலையிலுள்ள சாதியினரைத் தண்டிக்கவே செய்தனர். பொதுவாக பள்ளர், நளவர், பறையர் சாதியைச் சேர்ந்த மக்களே பாதிப்புக்குள்ளாயினர். இக்காலப் பத்திரிகைகள் வடமாகாண அரசாங்க அதிபர்களது நிருவாக அறிக்கைகள், தினசரிக் குறிப்புக்கள் ஆகியவற்றை ஆராய்வோர் சாதியின் பெயரால் இழைக்கப்பட்ட அநீதிகளை அவதானிக்கத் தவறமாட்டார். உதாரணமாகப் பின்வரும் பெருங்கலவரங்களைக் குறிப்பிடலாம். 1914-இல் பண்டத்தெருப்பில் வேளாளருக்கும், தச்சருக்கும், தனக்காரக்குறிச்சியில் வேளாளருக்கும், பொற்கொல்லருக்கும், வரணியில் வேளாளருக்கும் பள்ளர், நளவருக்குமிடையே பெரும் மோதல்கள் ஏற்பட்டன. (3) 1922-இல் மூளாயில் வேளாளருக்கும் நளவருக்கும், உரும்பராயில் வேளாளருக்கும் பள்ளருக்கும், சிவியா தெருவில் வேளாளருக்கும் பள்ளருக்குமிடையே பெருங்கலவரங்கள் நடைபெற்றன. 1931-இல் பிராம்பத்தையில் (சங்கானை) சான்டாருக்கும் பள்ளருக்குமிடையே நடைபெற்ற தொடர் மோதல்களின் விளைவாக அவ்விடத்தில் மூன்று மாத காலத்திற்குத் தற்காலிக பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டது. இக்கலவரங்களில்

□ க. அருமைநாயகம் □

www.tamilarangam.net



பெரும்பாலானவை பிரேத அடக்கம் சம்பந்த மானவைகளாகும், ஏனைய கலவரங்கள் பொதுக் கிணறுகள், குளிப்பிடங்கள் ஆகியவற்றை உப யோகித்தல் தாழ்ந்த சாதிப் பெண்கள் நகை அணிதல், உயர்சாதியினருக்கு தாழ்ந்த சாதி யினர் வழிவிட்டொதுங்கிச் செல்ல மறுத்தல் ஆகியவை சம்பந்தமானவைகளாகும். 1933இல் புங்குடுதீவில் நடைபெற்ற கலவரமொன்றுக்குக் கால் கோலாக விளங்கியது பறையர் சாதியைச் சேர்ந்த ஒருவர் அணிந்த காலணியாகும். இச் சச்சரவின்போது பறையரது பல குடிசைகள் தீக் கிரையாகியதுடன் பல கொலைகளும் நடை பெற்றன. (4)

## ஆலயப் பிரவேசம்

ஆலயப்பிரவேசம் பற்றிய சர்ச்சைகள் ஆரம்பகாலத்தில் புரட்சிகரமாற்றங்களுக்கு இட மளிக்காவிடினும் அதுபற்றிய வாதப்பிரதி வாதங்கள் 1930-ஆம் ஆண்டளவில் வலுப் பெற்றன. ஆலயப் பிரவேசம் சம்பந்தமான விடயங்களில் அரசாங்கம் நேரடியாகத் தலையிட விரும்பவில்லை. யாழ்ப்பாணத்துப் பெரும் சைவக் கோயில்கள் பொது வழிபாட்டுத்தலங்களாக (உயர்சாதியினர் மாத்திரம் உட்செல்லும் உரி மையுடன்) விளங்கினும் சட்டரீதியாக அவை பெரும்பாலும் குறிப்பிட்ட ஒருவரது அல்லது குடும்பத்தவரது பிரத்தியேகச் சொத்தாக விளங் கியது. இவையனைத்தும் பிராமணரதும் வேளா ளரினதும் கண்காணிப்பிலேயே இருந்தன. தாழ்ந்த சாதியினர் சட்டரீதியாக ஆலயப்பிர வேசம் செய்ய அனுமதி வழங்கும் சட்டமெது வும் இருக்கவில்லை, மாறாக அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்வதைத் தடுக்கக்கூடிய நீதி மன்றத் தீர்ப்புக்களே இருந்தன. 1910-இல் சட்டத்தின் துணையுடன் பலாலியில் உள்ள கோவிலொன்றில் பிரவேசிப்பதற்கு முயன்ற அம்பட்ட சாதியினர் ஏமாற்றத்திற்குள்ளாயினர். இந்தியாவில் உள்ள சைவக் கோவில்களில் பிரவேசிக்கும் சலுகை அம்பட்டருக்கிருந்த போதிலும் யாழ்ப்பாணச் சாதிமரபு முறைகள் அச்சலுகையை வண்ணாருக்கே வழங்கியிருந்தது. இதை அடிப்படையாகக் கொண்டே இவ் வழக்கை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் சைவசமய மரபின்படி அம்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கும் உரிமையற்றவர்களெனவும், அம்பட்டர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு கோவில் முகாமையாள ருக்கு உரிமையுண்டெனவும் கூறி, நீதிமன்றம் அத்தகைய தடையுத்தரவை வழங்க முடியுமென வும் தீர்ப்பளித்தது. (5) இத் தீர்ப்பினால் ஆலயப் பிரவேசத்திற்குச் சார்பான சட்டவாக்கம் அரை நூற்றாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்டதென லாம். இந்தியாவிலுள்ள நீதிமன்றங்களும் இத்தகைய கொள்கையையே கடைப்பிடித்தது. நீதிமன்றங்களின் ஆதரவுடன் சாதிக்குழுக்கள் தமது பாரம்பரிய சலுகைகளையும் தனித்தத்து வத்தையும் தொடர்ந்தும் அனுபவிக்கக்கூடிய வசதியிருந்தது. தாழ்ந்த சாதியினர் கோவிலில் சமூகம் கொடுத்ததினால் ஏற்பட்ட அசுசையைப் போக்குவதற்குச் செய்ய வேண்டிய பிராயச்சித்த கிரியைகளுக்காக உயர்சாதியினருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென இந்திய நீதிமன்றங் கள் தீர்ப்பளித்தன. (6)

## சமய மாற்றம்

சாதிப் பிரச்சினைகள் ஒரு கால கட்டத்தில் உக்கிரமடைவதற்கும், அது பற்றிய தீவிர வாதங்களுக்கும் வழிவகுத்த பிறிதொரு காரணி கத்தோலிக்க சமயப் பரம்பலாகும். கத்தோ லிக்கச் சுவாமிகளது குறிப்பாகச் சுவாமி ஞானப் பிரகாசரது சமய மாற்றங்கள் பழமை போற்றும் சைவர்கள் மத்தியில் பெரும் புயலைத் தோற்று வித்தது. கத்தோலிக்கத் திருச்சபையின் செல் வாக்கிலும், வலுவினாலும் யாழ்ப்பாணத்தி லிருந்த கரையார்கள் வேளாளரது தீவிரசாதிப் பிடிப்பினின்றும் சிறிது சிறிதாக நழுவக்கூடிய தாகவிருந்தது. சிங்களவர் மத்தியில் ஏற்பட்ட கொய்கமகரவா சாதியினரது போட்டிகள்போல் வெளிப்படையாகப் பிரச்சினைகள் தோன்றாவிடி னும் மறைமுகமாகக் கரையாரது சமூகப்படி தர முயர்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த கத்தோ லிக்கக் கல்லூரிகள், பத்திரிகை போன்றவை கரையாரது சமூக நிலை உயர்வதற்குப் பெரும் தொண்டாற்றின. (7) கல்வியினால் மேலோங்கி யவர்கள் தம்மை ஏனைய கரையா மக்களிட மிருந்து பிரித்துத் தாம் மேலோங்கிக் கரையார் எனவும் அழைக்கத் தொடங்கினர். ஏனைய ''குடி மக்கள்'' சாதியினரைப் போல வேளாள ருடைய அன்றாடத் தொழில்துறைகள், குடும்பக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றுடன் நேரடித் தொடர்புகளும் இருக்காத காரணத்தால் காலப் போக்கில் வேளாளரது சாதிப்பிடியிலிருந்து கரையார் நழுவியதற்கு இன்னொரு காரண மாகக் கூறலாம். சுவாமி ஞானப்பிரகசரால் முப்பத்தேழு கத்தோலிக்கத் தேவாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன எனக் கூறப்படுகின்றது. (8) இவைகளுள் ஒன்றைத் தவிர ஏனையவை வேளாளர் தவிர்ந்த சாதியினருக்காக ஸ்தாபிக் கப்பட்டவையாகும். அவைகளில் பன்னிரண்டு நளவருக்கும், பத்து பள்ளருக்கும், நான்கு துரும்பருக்கும், இரண்டு பறையருக்குமாக விளங்கின. இத்தேவாலய ஸ்தாபிதங்கள் சமய மாற்றங்களின் விளைவாக மேற்கொள்ளப்பட்டன வாகையால் உயர்சாதிச் சைவர்களது எதிர்ப் பைச் சம்பாதித்துக் கொண்டன. முற்போக்குச் சிந்தனையுடைய சைவர்களும் கத்தோலிக்கச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமய மாற்றங்களை எதிர்த்தனர். கிராமப் புறங்களில் சமய மாற்றங்களுக்கு பல்வேறு வகையான எதிர்ப்புக்கள் கிடைத்தன. கத்தோலிக்கச் சமயச் சுவாமியார் மேற்கொள்ளும் உபதேசங்களைக் குழப்பும் வகையில் சத்தமிடல், கூட்டம் நடக்கும் இடத்துக்கு மறுபுறம் சைவ சமயப் பிரசாரம் செய்தல், தேவாலயங்களை இடித்தல் சமயம் மாறியவர்களுக்கு தொழில் எதுவும் கொடுக்காது விடல், கள்ளிறக்குவோரது வருமானத்தைக் குறைக்கும் எண்ணத்துடன் பனைப் பாளைகளை வெட்டிவிடல் போன்ற நடவடிக்கைகளுடன் கைகலப்புகளிலும் ஈடுபட்டனர். சமய மாற்றம் சம்பந்தமாக எழுந்த கலவரங்களில் முக்கியமானவை 1911-ஆம், 1916-ஆம், 1922-ஆம் ஆண்டுகளில் வேளாளருக்கும் பள்ளருக்கும் இடையே ஏற்பட்ட கடும்மோதல்கள்,(9) 1902-இல் நீர்வேலியில் நடைபெற்ற சமய மாற்றுச் சம்பவம், போன்றவையாகும்.(10) கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்தவர்கள் உயர்சாதியினரது இம்சைக்குள்ளானதிற்குப் பல காரணங்கள் கூறலாம். (அ) தமிழ் சமுதாயத்தின் பொதுப் பண்புகளிலிருந்து மக்களை விலகிச் செல்ல சந்தர்ப்பமளித்தல். (ஆ) சமயம் மாறியவர்கள் தமது பழைய எசமானர்களுக்குத் தொண்டு செய்ய மறுக்கலாம் என்ற அச்சம் - குறிப்பாக நிலச்சுவான்தார்களது அச்சம். இக்காரணங்கள் நியாயமானவைகளாகவே காணப்படுகின்றன. ஏனெனில், கத்தோலிக்கச் சமயத்தவர்கள், பத்தொன்பதாம் நூற்ருண்டில் சமய மாற்றத்தில் ஈடுபட்ட புரட்டஸ்தாந்து சமயத்தவர்களைப் போன்று பெயரளவில் தானும் தமிழரது சமுதாய ஒழுங்கினை இக்காலத்தில் குழப்ப விரும்பவில்லை. அவர்கள் அமைத்த ஆலயங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களே சமய மாற்றம் நிச்சயமாக இனமாற்றமாகவோ, அல்லது சமுதாயத்தினுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்களைக் கைவிடுதலோ அல்ல—இதற்கு சாதியும் விதிவிலக்கல்லவெனக் கூறியுள்ளார் (11) எனவே உண்மையான காரணம் தாழ்ந்த சாதியினரது தொழிற் சக்தியினை இழந்துவிட வேண்டிய நிலை ஏற்படலாம் என்ற நிலச்சுவான்தார்களது அச்சமும், எசமான் குடியானவன் என்ற உறவுமுறை உடைந்து விடலாம் என்ற அச்சமும் கௌரவக் குறைவுமே இக் கெடுபிடிகளுக்கு அடிப்படைக் காரணங்களெனக் கொள்ளலாம்.

சமய மாற்றம் சாதிப் பிரச்சனைகளுக்கு எக்காலமும் முற்றுப்புள்ளியிடவில்லை. 1932-இல் நாவாந்துறையில் கத்தோலிக்க முக்குவருக்கும் திமிலருக்கும் கிராம வீதிகளில் இசையுடன் ஊர்வலங்கள் நடத்துவது சம்பந்தமாக எழுந்த சச்சரவை வடமாகாண அரசாங்க அதிபராலும், கத்தோலிக்க ஆலயராலும் தீர்த்துவைக்க முடியாதென்ற காரணத்தால் சட்டசபையே அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தது.(12) அத்துடன் கத்தோலிக்க திருச்சபை கல்வி விடயங்களில் சாதி வித்தியாசம் பாராட்டியதைக் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த தாழ்ந்த சாதியினரே கண்டித்தனர். ''ஆங்கில கல்விக்கு ஆதித்திராவிடர் அருகராவாரா?'' என்ற தரப்பில் ஆதித்திராவிடரின் நீதிக்காக வாதாடிய ''யாழ்ப்பாண வாதி பின்வரும் கேள்வியை எழுப்பினுர்''. ''நாமெல்லோரும் ஒரே பிதாவின் பிள்ளைகள் என்று சொல்லிச் சொல்லி மனதிலொன்று கிரியையிலொன்று வாக்கிலொன்ருய் நடந்து மெய்யானதும், வளர்ச்சியடைவதுமான மெய்க் கிறிஸ்து மதத்தைத் தம்மாசார நடவடிக்கையால் கெடுத்து சாதி பேதத்தையே கிறிஸ்து மத வேத புத்தகத்தின் ஒரு பகுதியாக்கவும் ஆண்டவரை மேல் சாதியாருடன் இணைத்து எளிய சாதியினருக்கே நரகத்தை வாசஸ்தலமாகக் கொடுக்கவும் ஐயையோ, குருமாரும், சபைகளுமான சுதேசிகள் செய்யும் மாரீச அலங்கோலத்தையும் கிறிஸ்தவ சபைகளையும் கிறிஸ்தவ கலாசாலைகளையும் கெடுக்கும் விதத்தையும் என்னென்று சொல்வது? கிறிஸ்து மார்க்கத்திற்கு எட்டுணையும் பொருந்தாத சாதி பேதம் கலாசாலைகளிலும், ஆலயங்களிலும், செய்யப்படும், புரளியை ஆதிதிராவிடா! நீ இன்னுேர் முறை பேசத் தவருய்.(13) சைவக் கோயில்கள், பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் கிறிஸ்தவர்களது ஸ்தாபனங்களுக்கும் இவ்விடயங்களில் ஒற்றுமை காணப்பட்டது. சாதி சமூகப் பிரச்சினை, சமயப் பிரச்சினை அல்ல.

## இந்தியச் செல்வாக்கு

மேற்கூறப்பட்ட வன்முறைச் சம்பவங்கள், சமய மாற்றங்கள் ஆகியனவையும் இந்தியாவில் அக்காலத்தில் நடைபெற்று வந்த சமுதாயப் போராட்டங்களும் அரசியல் கிளர்ச்சிகளும், யாழ்ப்பாண சாதிமுறை பற்றிய சிந்தனைகளில் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தின. ராணடே (Ranede) மகாத்மா காந்தி போன்ருேரது, சமூகக் கொள்கைகளும் இந்திய தேசிய காங்கிரசின் போக்கும் ஹரிஜனர் பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களும் அவதானிக்கப்பட வேண்டியனவாகும். சமுதாயத்தின் அடித்தளத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் வரை அரசியல் சுபீட்சமடைவது துர்லபம் என்ற கருத்தை மகாத்மா காந்தியடிகள் தேசிய காங்கிரசினர் மத்தியில் பரப்பி, உயர்குழாத்தினரது செல்வாக்கின் கீழிருந்த தேசிய காங்கிரசை மக்களியக்க மாக்கினுர். மகாத்மாகாந்தி ''யங் இந்தியாவில்'' ஹரிஜனர் பற்றி

www.tamilarangam.net



எழுதிய கட்டுரைகள், பாரதியார் பாடல்கள், மொடேன் ரிவியூ (Modern Review) போன்ற சஞ்சிகைகள் யாழ்ப்பாணத்து கல்வி கற்றோரால் விரும்பிப் படிக்கப்பட்டவைகளாகும். தவிர யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரிக்கப்பட்ட ஆங்கில, தமிழ் பத்திரிகைகள் மூலமும், இந்தியச் செய்திகளைப் படித்து அறிந்தனர். மகாத்மா காந்தி நடாத்திய ஒத்துழையாமை இயக்கம், சத்தியாக்கிரகம், வெளிநாட்டுப் பொருட்களை பகிஷ்கரித்தல் போன்ற நடைமுறைச் சம்பவங்கள் ஆகியவையும் யாழ்பாணத்தவரால் கூர்ந்து அவதானிக்கப்பட்ட நிகழ்ச்சிகளாகும். அது மாத்திரமின்றி இந்தியாவின் ஹரிஜனரது சமூக நிலையை உயர்த்துவதற்கும் தாழ்வு மனப்போக்கை மாற்றுவதற்கும் முயன்றவர்கள் பிராமணர் என்பதும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். சென்னை மாநில சட்ட சபையில் ஆலயப் பிரவேச சட்டம் இயற்றுவதற்கு பொறுப்பாக இருந்தவர்கள் பிராமணர்களான ராஜகோபாலசாரியார் முதலியோர் ஆவர். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு ஹரிஜனங்களை இட்டு சென்று ஆலயப்பிரவேசம் செய்யப் பொறுப்பாக இருந்தவர் இன்னொரு பிராமணரான ஏ. வைத்தியநாத ஐயர் ஆகும். இந்தியாவில் பரவலாகவும், தமிழ்நாட்டில் குறிப்பாகவும் இதே காலத்தில் நடைபெற்ற இயக்கங்களில் சாதி பற்றிய விடயம் முக்கிய இடம் பெற்றிருந்தது. இந்தியச் சுதந்திரப் போராட்டம் மக்கள் இயக்கமாக இருந்தது. இதனால் சகல சாதியினரையும் கூட்டுச் சேர்க்க வேண்டியிருந்தது. இலங்கையில் ''சுதந்திரப் போராட்டம்'' மக்கள் இயக்கமாக வல்லாது மத்திய வகுப்பினரது இயக்கமாகவும் சாதாரண மக்களின் ஆதரவை நாடாத ஒன்றாகவும் விளங்கியது. இவ்விருத்திகள் யாவும் புரட்சிகரமானவைகளாகும். இலங்கையிலும் சேர். பொன். இராமநாதன், சேர், பொன். அருணாசலம் போன்றோரும் தாழ்ந்த சாதியினரது கல்வி விடயங்களில் உயர் சாதியினர் சிரத்தையெடுக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி வந்துள்ளனர். (14) குறிப்பாக அருணாசலம் அவர்கள் பத்தொன்பதாம் நூற்றூண்டு அனுபவங்களைக் கொண்டு உயர்சாதியினரது மனப்பாங்கு மாறவேண்டுமென வற்புறுத்தியுள்ளார். (15)

சாதிக்கலவரங்களும், அதன் விளைவாக மீண்டும் கிறிஸ்தவம் துரிதமாக விருத்தி அடைந்து வருவதையும் அவதானித்த இந்து வாலிப சங்கத்தினர், தாழ்ந்த சாதியினரது கல்வி நிலையை விருத்தி செய்ய வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினர். பஞ்சமரது ''சமய சமயச்சார்பற்ற கல்விக்கு உடனடியாகப் போதிய முன்னேற்பாடு எதுவும் செய்ய நாம் தவறினால், அப்பணியைக் கிறிஸ்தவர்கள் மேற்கொண்டு தமது பட்டியைக் கூட்டினால் நாம் மனக்குறைபாடு கொள்ளுதல் கூடாது. இப்பிரச்சினையை எதிர்நோக்கி அதற்குரிய பரிகாரத்தைத் தேடுவதற்கு எமக்கு துணிவில்லாதிருந்தால், நாம் ஒதுங்கியிருந்து ஏனைய சமயத்தவர்கள் கல்வி வசதிகள் அளித்து பஞ்சமரது நிலையினை உயர்த்துவதைப் பார்க்க வேண்டும். (16) இது போன்ற சிந்தனை இக்காலகட்டத்தில் வரவேற்கப்படவேண்டிய தொன்றாகும். அத்துடன் கிறிஸ்தவர்களது முயற்சியினை முதன் முறையாக மெச்சுவதாகவும் உள்ளது. போதிய பொருளாதார உதவியும் சமூகத்தின உதவியும் கிடைக்காததால் தமது பஞ்சமர் பற்றிய திட்டங்களை இந்து வாலிபர் சங்கத்தினரால் நிறைவேற்ற முடியவில்லை. எனினும் 1919இல் ஆனைப்பந்தியில் பஞ்சமருக்காகப் பாடசாலை ஒன்றை நிறுவினர். (17) மேலும் பஞ்சமர்கள் மரணச் சடங்குகளில் பறைமேளம் அடிப்பதால் ஏற்பட்ட ''தலைகொய்யும்'' சம்பவங்களையும் இவர்கள் கண்டித்தனர். இந்தியாவிலுள்ள சைவவேளாளர்கள் பிரேத ஊர்வலத்தில் பறைமேள மடிப்பதை அவமரியாதையாகக் கருதுவதைச் சுட்டிக்காட்டி இங்குள்ள வேளாளர்கள் தமக்குத்தான் அத்தகுதியுடையது எனக் கோருவது முரண்பாடானதும் நியாயமற்றதும் என விளக்கினர். (18) இவர்கள் இம் முயற்சியில் சித்திபெற முடியவில்லை.

## சம ஆசனம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரது முயற்சியினாலும், பின்னர் சைவர்களது பிரயத்தனங்களினாலும் பல பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. இவைகளில் பெரும்பாலானவை அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளாகவும் விளங்கின. இவைகளில் சிலவற்றில் ஹரிஜனர் படித்து வந்தாலும் உயர்சாதிப் பிள்ளைகளுடன் சரிநிகர் சமானமாக ஆசனமமைத்துப் படிக்க முடியவில்லை. தரையிலமர்ந்து அல்லது வகுப்புக்கு வெளியே நின்று தான் பாடம் கேட்க வேண்டியிருந்தது. அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளில் இந்நிலை நீடிப்பதை விரும்பாத அரசாங்கம் 1929 ஆம் ஆண்டு கல்விப் பணிப்பாளரது பிரமாணம் ஒன்றின் மூலம் அரசாங்க, அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைத் தும் இன, மத, சாதி, தேசிய வேறுபாடின்றி சகல பிள்ளைகளுக்கும் சரியாசனம் கொடுக்க வேண்டுமெனப் பணித்தது. (19) இப்பிரமாணம் யாழ்ப்பாணம் முழுவதும் பெருங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது. (20)

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனவாத அரசியலில் பாட்டாளி வர்க்கத்தை இழுத்துச் சென்ற இடதுசாரித் தலைமை

டாக்டர் கா. சிவத்தம்பி

இன வாதம் வெறியேறி நிற்கும் ஸ்ரீலங்கா அரசின் வெறிச் செயல் சற்றும் குறைந்த பாடில்லை. சமரசம் சமரசம் என்ற கூச்சல் அடிப்பட்ட இன வெறி விஷப் பாம்பிடமிருந்து வரும் கூச்சலே இன்றி வேறில்லை. இனவாதம் முளைத்து, கிளைத்து பற்றிப் படர்ந்து விரிந்து அழித்து வருகிற வரலாற்றுச் சமூகப் பின்னணியை பேராசிரியர் கா. சிவத்தம்பி எடுத்து வைக்கிறார். சிவத்தம்பி, சர்வதேசப் புகழ்ப் பெற்ற ஆய்வாளர். முற்போக்கு இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கைச் செலுத்தியவர்.

அவருடைய கருத்தை அவருடைய நடையில் தருகிறோம்:

இலங்கையில் தமிழ்த்தேசியம் உருவாகையில் அதற்கு உந்து விசைக் காரணியாக அமைந்தது யாது? குமாரி ஜயவர்த்தன இதனையிட்டுக் கூறியுள்ளவை வருமாறு: சிங்களவர்களினதும் தமிழர்களினதும் மொழி உரிமைகளே அடிப்படை வாதவிடயம் ஆக, அவற்றைச் சூழ இவர்களுக்கிடையில் பகைமை தலை தூக்கலாயிற்று. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் அவ்விடயம் முன்னணிக்கு வரலானது.

சிங்கள மக்கள் மீண்டும் போலியுணர்வுக்குப் பலியாயினர். முதலாளித்துவ வர்க்கமானது பாட்டாளி வர்க்கத்தினரைச் சூறையாடி வருகிறது. முதலாளித்துவ வர்க்கம் அதற்காகக் கண்டனத் தாக்குதலுக்கு உள்ளாயிருத்தல் வேண்டும். அதனை விடுத்து அவர்களது மொழி, சமயம் வாழ்க்கைத் தோரணை, தறுகுறும்பான அயோக்கியப் பழக்க வழக்கங்கள் என்பவை குறித்துக் கண்டனக் கணைகளுக்கு அவர்கள் ஆளாகினர்கள். சிறுபான்மை இனத்தவர்கள் பகைவராகத் தோற்றமளித்தனர்.

எழுதுநர்கள், ஆசிரியர்கள், சிறுதரவர்த்தகர்கள் முதலானோரை உள்ளடக்கிய மத்திய தர வர்க்கத்தினர் தமது தீவிர வாதத்தை மறந்து, ''சிங்களம் மாத்திரம்'' என்ற போர்க் கொடி உயர்த்தினர். எடுத்ததற்கெல்லாம் யுத்த சன்னத்தராகும் சுலபமான பாங்கை அடியொற்றி, அவர்கள் இனக் குரோத வன்செயல் எனும் சகதிக்குள் துரித கதியில் வழுக்கி, கீழ்நோக்கி கீழ் நோக்கி நாட்டை அதனுள் அமிழ்த்துவாராயினர்.

சிங்கள மத்திய தரத்தின் இப்போர்த்தொனி 1956இல் சட்ட உருப் பெற்றது ('சிங்களம் மட்டும்' சட்டம்). ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் தேசியத்தின் ஒரு சட்ட பூர்வ வடிவம் எனவும், அதற்கு இடதுசாரிக் கட்சிகளின் அங்கீகாரம் கிடைத்தது.

'ஆயிரத்துத் தொள்ளாயிர்த்து அறுபதுகளில், இடதுசாரிப் பிரச்சாரத்தின் பிரதான தாக்குமுனை, இலங்கை தமிழரசுக் கட்சியினதும் அதன் தலைவர்களினதும் கோரிக்கைகளைச் சாடும் போக்குக்கொண்டு இயங்கிற்று. ஆவேச மார்தட்டும் பாணியில் சிங்களவர் அப்பிரசார இயக்கத்தை நடத்தினர்.


(குமாரி ஜெயவர்த்தனவின் நூலில் எண்பத்தோராம்பக்கம்)

'அதுகாறும் இலங்கையில் இடதுசாரிகள் இலங்கைத் தீவின் அரசியல் வாழ்க்கைக்கு செலுத்திய பங்களிப்பு உருப்படியாக இன ஒதுக்கல், இனக் குரோதம் இல்லாத வகையில், ஜனநாயக, சோஷலிஸ, உன்னத குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தது. உழைப்பாளி வர்க்கச் செயலாக அமைந்த அப்பங்களிப்பு, அவ் வர்க்க ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இருந்தும், அத்தறுவாயில் இடதுசாரி இயக்கம் பாட்டாளி வர்க்கத்தினைப் பலகட்சிக் கூட்டு அரசாங்கங்களுக்கு இட்டுச் சென்றது. அத்துடன் இடதுசாரித் தலைமை நின்று விடவில்லை. அதனிலும் பார்க்க ஆபத்தான இனவாத அரசியலுக்கும் அது பாட்டாளி வர்க்கத்தை வழி நடத்திச் செல்ல ஆரம்பித்தது.

இலங்கையில் பல மனித இனங்களைக் கொண்டமைந்த தொழிலாள வர்க்கத்தின் மத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதை நாம் ஆட்சேபிக்கிறோம்?

பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் இனிமையானது என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. தமிழுக்குச் சொல்லப்படும் உயர்வைத்தாம் நாம் ஆட்சேபிக்கிறோம். மனிதன் செயலற்றுப் போகும்படி தமிழின் உயர்வு கற்பித்து எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. பாஷையே முத்தொழிலையும் செய்ய வல்ல சக்தியுடையதென்றால் அந்த பாஷையை நாம் சீர்திருத்த முயலுவானேன் என்று தமிழன் நினைத்தான். ஒரு கதை சொல்லுகிறேன். ஒரு அரசன் வீட்டில் பலர் திருடினர். திருடினச் சொத்துக்களை அலமாரியிலும் பூமிக்கடியிலும் வைத்திருந்தனர், கோயில் பூசாரி சுவாமியின் கழுத்தைத் திருகி அதன் தொந்திக்குள் திருட்டுச் சொத்தை போட்டுவிட்டார். அரசனது ஆட்கள் மற்ற இடங்களிலிருந்து சொத்துக்களைக் கண்டுபிடித்து விட்டனர். ஆனால் சுவாமியின் வயிற்றுக்குள்ளிருந்ததைப் பார்க்கவில்லை. அய்யர் திருடி, கடவுளின் வயிற்றில் வைப்பாரென்று மக்கள் நினைப்பார்களா? இல்லை. கடவுள் பெயரால் அமைக்கப்பட்ட சிலையில் திருட்டுச் சொத்து வைக்கப்பட்டிருக்கும் என்று காவலாளிகள் நினைக்கவில்லை. அப்படி நினைப்பது — சிலையை எடுத்துப் பார்க்க எண்ணுவது பக்தியாளருக்கு விரோதமெனக் கருதிவிட்டனர், இதனாலேயே பார்க்க முடியாமற்போய் விட்டது. எவ்வளவு மரியாதை செய்யலாமோ அதற்குமேல் லட்சம் மடங்கு செய்வது ஆபத்தில்தான் முடிகிறது.

---

யில் வர்க்க உணர்வை வளர்த்தெடுக்க ஆண்டாண்டு காலமாக நடத்தி வரப்பட்ட போராட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக பாட்டாளி வர்க்க முறைமையினுள் இன பேதம் அல்லது இனக் குரோதம் எனும் நச்சுச் செல்வாக்கு ஊட்டப்பட்டது. அதன் விளைவாக, 1977, 1983 ஆகிய வருடங்களில் இலங்கைத் தீவில் எண்ணற்ற தமிழ் மக்களைப் பலியெடுத்த வேள்விகளில் பாட்டாளி வர்க்கத்தின் பல பகுதியினர் பங்குபற்றினார்கள் ('எத்னிக் அன்ட்கிளாஸ் ஔற்பேர்ஸ்ற்ஸ் இன் சிறீலங்கா', கொழும்பு, 1985 : பக்கம் 1, 2, 3).

அற்ப கருமங்களுக்கெல்லாம் வெளிக் கிளம்பிய சிங்களவரின் போர் நாட்டத்தினை மெய்யான தேசியம் என இடதுசாரி இயக்கம் இலங்கையிற் கொண்டமை வருந்தத்தக்க விடயமாகும். அரசாங்கம் புரிந்த தமிழர்க்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அவ்வப்போது தமிழர் இயற்றிய பிரதிச் செயல்களே தமிழரின் தேசியத்தினது கருவூலமாயின என்பதைப் புரிந்து கொள்ள இடதுசாரி இயக்கம் தவறியமை பரிதாபத்துக்குரியது.

இடதுசாரி இயக்கம் இவ்வாறு தவறியமையால் 1956 முதல் கொண்டு தமிழரின் தேசிய உணர்வுகள் அக நோக்காக வளர்ச்சி அடையலாயின. தமிழரின் உள்ளுணர்வுகளினது மெய்ப்பண்பை நன்கு உணர்ந்து கொள்ளவல்ல ஓர் இடதுசாரி இயக்கம் இலங்கையில் நிலவி இருக்குமானால் தமிழ் மக்களின் தேசியத்திற்குக் கிடைத்ததைவிடப் பரந்த புரிந்துணர்வு உள்ளபடியாக வழங்கப் பெற்றிருக்கும்.

www.tamilarangam.net

# யாவரும் கேளிரென...

"நமது கட்சி ஒரு மகத்தான கட்சி, புகழ் மிக்க கட்சி. பிசகற்ற கட்சி. இது அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு உண்மை. ஆனாலும் நம்மிடம் இன்னும் குறைபாடுகள் உண்டு. இதுவும் அங்கீகரிக்கப்பட வேண்டிய உண்மையாகும். நாம் எல்லாவற்றையும் அங்கீகரிக்கக்கூடாது. சரியானவற்றை மாத்திரம் அங்கீகரிக்கவேண்டும். அதேபோல் எல்லாவற்றையும் நிராகரிக்கக்கூடாது. தவறானவற்றைமாத்திரம் நிராகரிக்கவேண்டும். நமது வேலையில் முக்கியமான அம்சம் நமது சாதனைகள். ஆனால் அதில் இன்னும் பல குறைகளும் தவறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. எனவேதான் நாம் ஒரு சீர்செய் இயக்கத்தை நடத்தவேண்டியிருக்கிறது. நமது சொந்தமான சீகவாதம், அதிகாரத்துவம், கோஷ்டிவாதம் ஆகியவற்றை நாம் விமர்சனம் செய்தால் நமது கட்சியின் புகழுக்கு மாசு ஏற்படுமா? இல்லை என்று நான் எண்ணுகிறேன்."

மாவோ சே துங்

(பிரச்சார வேலைபற்றிய தேசிய மாநாட்டுரையில்)

எங்கள் மீது துப்பாக்கி சன்னங்களையும், பாரிய குண்டுகளையும் பொழிந்து எமது அருமைத்தோழர்களை-தலை சிறந்த வீரர்களை, வீழ்த்திக்கொண்டிருக்கும் எதிரி எம்முன்னே முழுப்பலத்துடன் உயர்ந்து நிற்கிறான். எதேச்சாதிகாரமான அரசுக்கு எதிராகப் போராடுவதும். அரசியல் சுதந்திரம் பெறவேண்டியதுமே இன்று எமக்கு முன்னுள்ள முக்கிய பணியாகும்.

இத்தகையதொரு போராட்டத்தில் தியாக உணர்வுடனும் நேர்மையான அர்ப்பணிப்போடும் போராளிகள் தமது கரங்களை இறுகப்பிணைத்துக் கொள்ளவேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர். அவ்வாறு இறுகப்பிணைந்த போராளிகளின் உருக்கையொத்த பலத்தினால் எதிரிகள் விரட்டப் படவேண்டும். எமது மண் மீட்கப்படவேண்டும். வாழ்வில் வசந்தம் வீசவேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டோராய் மக்கள் வாழ்கின்றனர்.

ஆனால் நமது கருத்துப்படி ஒரு நெருக்கடியான நிலைக்குள் படிப்படியாக தள்ளப்பட்டுவருகின்றோம் என்பதை வருத்தத்துடன் தெரியப்படுத்த வேண்டும். இந்த நெருக்கடிக்கு மூன்று காரணிகளை குறிப்பிட்டு கூறமுடியும் முதலாவதாக ஈழத்தின் தென் பகுதியில் அதாவது திரியாய், திரிமலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளில் அரச இராணுவத்தின் அதிகரித்த செயல்பாடுகளும் அடாவடித்தனங்களும், அன்றாடம் காய்ச்சி அனுதைகளாக வாழ்வு குலைக்கப்பட்டு காடுகளிலும், மலைகளிலும், ஒளிந்துக்கொள்கின்ற மக்களின் நிலை, தினசரி நடக்கும் கொலைகளாலும், சித்திரவதைகளாலும் உள்ளம், உடல் உடமை, இழப்புக்களான போதிலும் மண்ணைக்காப்பதற்காக போராடிவரும் தரம்.

இரண்டாவதாக கபடத்தனமாக அரசு மேற்கொள்ளும் பேச்சுவார்த்தை என்னும் மாயைகளில் சிக்கி இடைக்

www.tamilarangam.net



காலத் தீர்வு கிடைக்கப்போவதாக எண்ணுகின்றபோக்கு, அரசு தன்பிடியில் இருந்து தளர்ந்துவருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் பேரம்பேசி ஆகக்கூடுதலானதைப் பெற்றுக்கொண்டு விடுதல் வேண்டும் என மிதவாதிகள் துடிக்கின்றார்கள். இப்படியான சமாதான தீர்வின்பின் இன்றைய போராளிகளை எப்படிச் சமூக வாழ்க்கை ஓட்டத்துடன் இணைப்பது என்றும் இவர்கள் அளவுக்கதிகமாகவே கவலைப்படுகின்றார்கள் இந்தப் போக்கின் விளைவால் ஏற்படுகின்ற சிக்கல்கள்.

மூன்றாவதாக போராளிகள் மத்தியில் காணப்படுகின்ற சலிப்பு களைப்பு. இந்த அம்சம் குறித்து நுணுகி ஆராய வேண்டியுள்ளது. எந்தவிதமான சுயலாபத்தையும் கருதாமல் தம் சொந்த எதிர்காலத்தைப் பணயமாக்கி, உயிரையும் இழக்க திடங்கொண்டுள்ள போராளிகள் மத்தியில் சோர்வு ஏற்படுவதை கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. இத்தகைய சோர்வின் அடிப்படையை ஆராய்ந்து தெளிவுபடுத்துதல் மூலமே இறுக்கமான கட்டுக்கோப்பினை இயக்கத்துள் பேணுதல் சாத்தியமாகும். போராளிகளுக்கிடையில் - இயக்கத் தோழர்களுக்கு இடையில் ஏற்படுகின்ற சிக்கல்களை பெதுவாக மூன்று வகைப்படுத்தலாம் அவையாவன:

1) உணர்ச்சி வேகத்தினாலும், ஆயுதங்களைப்பாவிப்பதில் பிரியப்பட்டும் இணைந்தவர்களினால், நீண்டகாலத்திற்கு நிலைக்க முடியாத தன்மை.

2) இயக்கங்களுக்கிடையிலும், இயக்கத்துக்குள்ளும் ஏற்படுகின்ற முரண்பாடு மோதலாக வெடிக்கின்ற சூழ்நிலையினால் போராட்டப் போக்கில் தோன்றும் அதிருப்தி

3) சொந்தப்பிரச்சினைகளால் தத்தம் தனிப்பட்ட எதிர்காலத்தை வளப்படுத்த முனையும் போக்கு எனக்குறிப்பிட முடியும். இனி இவை ஒவ்வொன்றையும் தனியாகப் பார்ப்பது நன்மைபயக்கும் எனலாம்

முதலாவதில்; குறிப்பாக யூலை 83ல் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவால் உந்தப்பட்டு இணைந்து கொண்டவர்கள். நேரடியாக தாக்குதல்களுக்கு இலக்கானதாலோ அல்லது மறைமுகமாக பாதிக்கப்பட்டதாலோ இணைந்து கொண்ட இத்தகைய நபர்களிடம் உணர்ச்சி மேலீடும், எதிரிகளைப் பழிவாங்கும் மனோபாவமும் தான் நிறைந்து காணப்பட்டது. இயக்கப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவினால் தனித்தனி ஒவ்வொருவரையும் இனம்பிரித்து வேறுபடுத்திப்பார்ப்பதில் ஏற்பட்ட இடைவெளிக்குள் இணைந்து கொண்ட - இத்தகையோர் காலப்போக்கில் வேகம் குறைந்து ஒதுங்கிச்செல்ல முனைவதைக்காணலாம். தாங்கள் ஒதுங்கிச்செல்லவேண்டும் என்பதையே முதன்மைப்படுத்தும் இவர்கள் இதற்காகவே அமைப்பின் மீதும் அமைப்பின் தோழர்களின் நடவடிக்கைகளின் மீதும் சதா குற்றம் காண்பதையே இலக்காகக் கொள்கின்றனர். தத்தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றாமல் காலத்தை கடத்துவதையும், ஏற்படுகின்ற நிருவாகரீதியான சிக்கல்களை பெரிதுபடுத்தி தோழர்களின் தொழில்பாடுகளுக்கு தடங்கலாக இருப்பதையும் இவர்கள் கொண்டிருப்பதை பரவலாக காணலாம்.

இரண்டாவதாக; அமைப்பின் முன்னணித் தோழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய அணுகு முறை மாறுபாடுகள், ஆளுமைகள் என்பவற்றில் வேறுபாடு காண்பதினால் ஏற்படுகின்ற சிக்கல்களாகும், வெவ்வேறு அமைப்புகளுக்கு இடையில் மூளுகின்ற பகைமை, மோதலாக வெடித்து தீர்த்துக்கட்டுவது என்பது வரை செல்லும்போது தோன்றுகின்ற விரக்தியாலும், போராட்டப் போக்கில் ஒரு நம்பிக்கையீனமும் அதிருப்தியும் பிறக்க வழிசமைக்கப்படுகிறது. சுருங்கச் சொன்னால் அமைப்பின் பொறுப்பான சில தோழர்களின் நடவடிக்கையால் பாதிக்கப்படும்போது அதையே அமைப்பு முழுமைக்கும் பொதுவாக்கிப்பார்ப்பதும், இணைந்து வேலைசெய்கின்ற அமைப்பின்மீது ஏற்படும் அதிருப்தியை, இலட்சியம் முழுமைக்கும் பொதுவாக்கிப்பார்ப்பதுமான போக்கு. இது தவறானதொன்றாகும். உணர்வுபூர்வமாக சாதாரணமக்களின் பால்கொண்ட பாசமும், இந்த மண்ணின் விடுதலைக்கான அர்ப்பணிப்பும் மிக்க தோழர்கள் இந்தத் தவறை இழைக்கமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

மூன்றாவதாக; இளைஞர்களாக அமைப்புடன் இணைந்து வேலை செய்ய ஆரம்பித்து தொடர்ந்து நீண்டகாலமாக போராட்டப் போக்குடன் பின்னிப்பிணைந்து வேலை செய்யும் தோழர்களுக்கு அமைப்பு நடைமுறைகளுடனே உடல், உளரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்களும் பாதிப்புகளும், இதன் காரணமாக தத்தம் சொந்த எதிர்காலத்தை மட்டும் முன்னிலைப்படுத்திப்பார்ப்பது, அமைப்பில் இருந்து தூரவிலகிச்செல்லும் போக்கு, இவ்வாறான போக்குகளினால் அமைப்பிலிருந்து தூரவிலகிச் செல்பவர்களை கட்டுப்படுத்தவேண்டி அமைப்பை இறுக்கமானதாக வரையறுப்பது அவசியமானதாகும். அமைப்பின் ஒவ்வொரு தோழரும், ஏன் ஒவ்வொரு போராளியும் கூட இன்றைய சிக்கல்களையும், இச்சிக்கல்களின் அடிப்படையையும் புரிந்து தெளிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் வரலாற்றில் தத்தம் பாத்திரத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலம் வாசகர்கள் கவனத்திற்கு

'பாலம்' இதழுக்குச் சந்தா செலுத்தியவர்கள் முகவரி மாறும் போது 'மாறிய முகவரியை' உடனுக்குடன் தெரியப் படுத்தி உதவுங்கள்.

பணம் அனுப்புகின்றவர்கள் பணவிடைத் தாளின் (M.O. Form கிழிப்பத்தில் தமது முகவரியை மறவாது எழுதுங்கள்.

சிறுகதை, விமர்ச்சனம், பேட்டிக் கட்டுரை, கவிதை, மொழி பெயர்ப்பு ஆகிய படைப்புகளை வாசர்களிடமிருந்து வரவேற்கின்றோம்.

ஈழ நண்பர் கழக, நண்பர்கள் சந்தா, நன்கொடைச் சேர்த்து அனுப்புதல் மூலம் ''பாலம்'' இதழைப் பலப்படுத்துங்கள்.

இடப் பற்றாக்குறை காரணமாக 'வைகறை'யின் பத்திரிக்கைகள் மக்களின் பல்கலைக் கழகங்கள்'' எனும் கட்டுரை இந்த இதழில் வெளி வரவில்லை. அடுத்த இதழில் தொடரும்.

அடுத்த இதழில் ராஜம் கிருஷ்ணன் எழுதிய ''மாணிக்க கங்கை'' புதினம் பற்றிய அறிமுகம் வெளிவரும்.

எதிரிக்கெதிரான யுத்தத்தில் வீர மரணம் அடைந்தவரும் கொரில்லா போராளியாய் வாழ்ந்து கவிஞனாகத் திகழ்ந்த பிலிப்பைன் சின் மக்கள் கவிஞர் பற்றிய அறிமுகம் மற்றும் கவிதைகள்.

'பாலம்' இதழிற்கு ஆண்டுச் சந்தா ரூ. 20 மட்டுமே. சந்தாவும், நன்கொடையும் படைப்புகளும் அனுப்ப வேண்டிய முகவரி :

பாலம், மாத இதழ்,
த. பெ. எண் : 39, மதுரை-2.

---

தைச் செய்வனே ஆற்றுதல் சாத்தியமானதாகும்.

இந்த வகையில் தோழர் களுக்கு ஏற்படுகின்ற சிக்கல் களைப் புரியவைப்பதில் சுய விமர்சனங்களை முதன்மைப் படுத்தவேண்டும். சுயநல வரம் புகளை மீறமுடியாமல் பொது மக்களிடம் இருந்தும் போ ராட்டப் போக்கிலிருந்தும் பிரிந்து போக விரும்புபவர்களை அன்னியப்பட்டு போகவிரும் புபவர்களைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டிய தில்லை. ஆனல் அமைப்பின் வேலைகளில் ஆர்வமும் ஈடுபா டும் உள்ளவர்கள் ஏதோ சில குறைபாடுகளினல் ஒதுங்கி செல்ல முனைவதை கட்டுப் படுத்தவேண்டும். தோழர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படு கின்ற விமர்சனமானது நியா யம் நிறைந்ததாகவும் ஆராய் வுடன் நிலைமைகளை விளக்குவ தாகவும். நம்பிக்கை ஊட்டுவ தாகவும் இருக்கவேண்டும். அதில்லாமல் கரடுமுரடான தும் அதிகாரத்துவம் உடைய தாகவும் கட்டுப்பெட்டித்தன மாகவும், வரட்டுவாதமாகவும் இருக்கக்கூடாது. அப்படி இருக் குமாயின் தோழர்கள் தூர விலகிச் செல்வதை ஊக்கிவிப் பதாகவே போய்விடும். இது தவருனது.

எனவே விமர்சனம் செய்யப் படுவதில் நமக்கு இருக்கவேண் டிய நோக்கம், வைத்தியர் ஒரு வர் நோய்க்கு சிகிச்சை அளிப் பதுபோல இருக்கவேண்டும்.

அதாவது, நோயாளியைக் காப்பாற்றுவதேயன்றி அவர் இறப்பதற்கு சிகிச்சை அளிப் பதல்ல. அனைத்து சிகிச்சை முறைகளும் நோயாளியைக் குணப்படுத்துவதையே உறுதி செய்யவேண்டும். உண்மையா கவும், விசுவாசமாகவும் உழைக்கும் தோழர்களிடம் அவர்களுடைய சித்தாந்த அல் லது அரசியல் நோயைக்குணப் படுத்துவதில் கடினமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்ளக்கூடாது. அப்படி நடக்குமாயின் நாம் எமது நோக்கத்தில் வெற்றி பெறு வது இயலாததாகிவிடும்.

—'பொதுமை' இதழிலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆய்வு

# ஈழப் போராட்டத்தைத் தீர்மானிக்கும் சக்தி எது ?

ஈழ விடுதலைப் போரில் தமிழக மக்களின் ஆர்வமும் நேசமும் ஆதரவும் பெரிய அளவில் சக்தி மிக்கதாக **இருந்தது** என்ற வரலாறு நிலைத்து விடுமோ என்ற சந்தேகம் உருவாகி வருகிறது.

தமிழகத்தில் ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள். விடுதலை அமைப்புக்களின் தொலைத் தொடர்பு கருவிகள் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன.

பெங்களூரில் நடைபெற்ற தெற்கு ஆசிய நாடுகளின் மாநாட்டிற்கு வந்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நவீன மகாத்மாவாக வேஷம் புனைந்து 'அகிம்சா' வேதம் ஓதிச் சென்றார்.

இருவேறு திசையில் நடந்து முடிந்திருக்கும் இந்தச் சம்பவங்கள் ஈழ விடுதலையை விஞ்ஞானப் பார்வையோடு நோக்கி உறுதியாக ஆதரித்து நிற்பவர்களுக்கு கசப்பையும் ஈழ விடுதலையில் போரிடும் சக்திகளாக இருப்பவர்களுக்கு வெறுப்பையும் விளைவிக்கலாம். ஈழ விடுதலை எனும் நிலைக்கு எதிராக இருப்பவர்களுக்கு உவப்பாகவும் கூட இருக்கலாம்.

ஆனால் ஈழத்தில் வாழும் நாற்பது லட்சம் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் குறித்தப் பிரச்சனை என்ற அளவில் அண்மையில் நிகழ்ந்த இச்சம்பவங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இதே நேரத்தில் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக தமிழக மக்களது நேசத்தைப் பெற்றிருந்த ஈழப்போராட்டமானது எதிர்காலத்தில் இழந்து விடுமோ என்ற சந்தேகம் போராடும் அமைப்புக்களுக்குள் தோன்றத் தொடங்கியுள்ளதும் நமது நினைவில் பதிக்க வேண்டிய ஒன்று.

இந்த அடிப்படையில் கடந்த கால நிகழ்வுகளை மீள் பார்வையிடுவதும் எதிர் வரப்போகும் காலத்தைத் தீர்க்கதரிசனத்தோடு எதிர் கொள்வதும் அவசியமாகும்.

1983 ஆம் ஆண்டு வட்ட மேஜை மாநாடு, 1985 திம்புப் பேச்சு வார்த்தைகள் கேள்விக் குறியாகி தோல்வியைத் தழுவியதால் ஈழத்தில் அல்லலுறும் மக்களின் அழிவுப்பாதைக்கு மேலும் வழிகோல வழி வகுத்தது என்பது யாவரும் அறிந்ததே.

ஸ்ரீலங்கா அரசின் கபடத்தனத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பலியானது. எனவே அரசியல் அரங்கிலிருந்து அகன்று போனது மட்டுமல்லாமல் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாய் தம்மைத் தாமே நியமித்துக் கொண்ட அவர்களின் பிற்போக்கான தன்மையால் 'அடையாளத்தையும்' இழந்து போனது இயல்பான விஷயம்.

தனித் தமிழீழமே தீர்வு என்று கோரிக்கையை முன்வைத்து 1977, தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியினர்க் பெரும்பான்மை தமிழர்களது ஆதரவைப் பெற்று வென்றனர். ஆனால் 1985ல் 'அடையாளப்' படுத்தக் கூடிய அளவில் கூட இல்லாது போனதற்குக் காரணம் இதற்கு முன்னால், மாவட்டச் சபைப் பற்றிய மாநாடு இவை போன்ற பல்வேறு பேச்சு வார்த்தைகளுமாகும்.

சமுதாயத்தின் உயர்நிலை செல்வாக்குப் படைத்தவர்கள் சமூகத்தின் அபிலாசைகளைப் பூர்த்திச் செய்யாது போவார்களேயானால் அவர்களுடைய 'நிலை' அகற்றப்பட்டு விடுவது வரலாற்று நியதியாகும். இதன் அடிப்படையில் ஆயுதப் போராட்டம் பரிணமம் பெற்று கூர்மையடைந்த நிலையில் அகிம்சை வழிப் பிரகடனத்தை அணிந்து கொண்டிருந்த அமிர்தலிங்கம் 'கூட்டணியினர்' நிராகரிக்கப்பட்டனர்.

ஆயுதப் போராட்ட வழியில் தமிழ் பேசும் மக்களின் தலைமையைச் சுவீகரித்துக் கொண்ட விடுதலை அமைப்புக்களின் போராட்ட வரலாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய அரசு மற்றும் தமிழக அரசு இவற்றின் நல்லெண்ண பங்கேற்போடும் வளர் நிலை அடைந்துள்ளது.

அடையாளம் காணுகிற அளவில் இருக்கிற ஐந்து விடுதலை அமைப்புகளும் மற்றும் ஏகப் பட்டக் குழுக்களும் ஈழப் போராட்டத்தைப் பங்கு போட்டுக் கொண்டன.

தேசிய இனச் சிக்கலானது கூர்மையடைந்த தற்கேற்ப தேசியப் போக்குடைய விடுதலை அமைப்புகளது சமச்சீரற்ற வளர்ச்சியும், தேசிய இனச் சிக்கலில் முற்போக்குப் பாத்திரத்தைச் செவ்வனே வகித்த முற்போக்கு அமைப்புக் களின் வளர்ச்சியும் கடந்தகால வரலாற்றுப் பாடங்களாகும்.

ஆனாலும் இயக்கங்களிடையே நேசசக்திகள் எது எதுவென இனம் காணுவதற்குரிய வாய்ப் புக்ள் இல்லாமல் போனதும் கவனிப்புக் குரியது.

விடுதலை அமைப்புக்களில் நிலவி வரும் அக முரண்பாடுகளின் வளர்ச்சி 'அழித் தொழிப் பில்' சென்றடைந்தது.

இதனால் பொது எதிரிக்கு எதிரான போ ராட்டம் மந்தமானது, பலவீனப்பட்டது.

இந்த நிலையை உற்று நோக்கினால் போ ராடும் அமைப்புக்களின் பலத்தைத் தீர்மானிப் பது மக்கள் சக்தி இல்லை என்பது மட்டுமல்ல இவ்வியக்கங்களின் தலைமை கூட சொந்தமான தாக அமையவில்லை.

மேலும் விடுதலை அமைப்புகளை, சமரசப் பேச்சு வார்த்தைகளும் நடுநிலையாளர்களின் போக்கும் நேச சக்திகளின் முரண்பாடும் பாதித்து ஆதிக்கம் செய்கின்றன.

கடந்த மூன்று வருட கால போராட்ட வரலாறு இதை நிரூபணம் செய்கிறது.

ஆயினும் கடந்த காலத்தின் வரலாற்றில் உள்ள முற்போக்கு அம்சத்தைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. வட்ட மேஜை மாநாட்டுத் தோல்வியின் தொடர்ச்சியாகத் திம்பு பேச்சு வார்த்தை வந்தது. ஈழப் போராட்டத் தினை பேச்சு வார்த்தையில் முடித்துவிட முடிவு கட்டிய ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசையும் தேசியப் போக்குக் கொண்டிருந்த இயக்கங்களை யும் மீறி ஈழப் போராட்டத்தினது முழு வடிவத் தையும் எதிரிக்குத் திடமாக உணர்த்தியதில், உறுதிப்படுத்தியதில் ஈழ தேசிய விடுதலை முன்னணியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழீழக் கோரிக்கை (வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் மட்டும் அடங்கிய பகுதி) யை முன்வைத்துப் போராடும் அமைப்புகளும் இணைந்த ஈழதேசிய விடுதலைமுன்னணி மலைய கத் தமிழர்களின் வாழ்க்கைக்கானத் தீர்வை திம்புமாநாட்டில் பிரகடனப்படுத்தியது. இந் நிலைப்பாடு ஈழப் போராட்டத்தின் தேசிய சிக்க லில் முற்போக்குச் சக்திகளின் நிறைவான பாத்தி ரத்தையே குறிக்கிறது. திம்பு மாநாடு ஸ்ரீலங்கா அரசிற்குத் தோல்வியைத் தந்தது என்றாலும் போராடும் இயக்கங்களின் கோரிக்கைகளுக் கான வெற்றியாகவும் கருத முடியாது.

திம்பு மாநாட்டுப் பேச்சு வார்த்தை முறி வடைந்த பின்னரும் கூட போராடும் அமைப் புக்களிடையே ஐக்கியமின்மை தொடர்ந்தது. எனவே ஈழப் போராட்டம் ஆரோக்கியமான உருவ வெளிப்பாட்டைப் பெறவில்லை.

ஸ்ரீலங்கா அரசின் அரச படைகளது ஆதிக்கம் யாழ்பாணக் குடா நாட்டில் ஒய்ந் துள்ள நிலையை போராடும் இயக்கங்களுடைய இராணுவ நடவடிக்கைகளின் இராணுவ பல மாக கருத முடியாது. ஏன் என்றால் ஈழத்தின் ஏனைய பகுதிகளில் இயக்கங்கள் பலமற்று இருப்பதும் கவனத்திற்குரியது. ஈழ தேசிய விடுதலை முன்னணியில் நிலவும் பிளவே இதற் குப் பிரதான காரணமாய் அமைந்துள்ளது வரலாற்று உண்மையாகும்.

போராடும் மூன்று அமைப்புக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தப்பட்ட 84 ஏப்ரல் மாதத்தி லிருந்து ஒரு ஆண்டு'அக முரண்பாடுகளை நீக்கு வதற்கான சமரசப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந் தன. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழ தேசிய விடுதலை முன்னணியுடன் இணை வது பற்றி ஈழ தேசிய விடுதலை முன்னணிக் குள் மாபெரும் போராட்டமே முற்றுப் பெற்று முடிவதற்குள் தமிழ் நாட்டு அரசியல் ஈழப் போராட்டத்தில் புகுந்து விளையாடியது துர திர்ஷடமே.

மலையகத் தமிழ் மக்களையும், ஒட்டு மொத்த மாக இலங்கையில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களையும் பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்தி ரம் பிரித்து வைக்க உலை வைத்தது மாதிரியே ஈழம் நிதர்சனமாவதற்கான பாதையிலும் இடையூறாய் வந்தது.

இத்திருப்பத்திலேயே ஈழவிடுதலைப் போ ராட்டத்தை தீர்மானிக்கும் சக்திகள் எவை என்பது கேள்விக்குறியதாகின்றது. ஈழத்தில் அன்றாடம் அல்லலுறும் மக்களது எண்ண அபிலாசைகளும் வெளிப்படுத்தப்படுமா? பிறவியே அடிமைப்படுத்தலாய் வாழ்ந்து

www.tamilarangam.net



கொண்டிருக்கும் மலையகப் பாட்டாளிகள் தீர்மானிக்கும் சக்தியா? என்பது விடை காணப் பட்டிருக்க வேண்டிய ஒன்றாகும். ஈழப்போ ராட்டம்ஸ்தாபன வடிவம் பெறப்பட்ட நாளி லிருந்து சுயநலம் விரும்பி போராட்டத்தைத் திசை திருப்பும் நடவடிக்கைகளைக் தொடரும் புற சக்திகளின் வெற்றியா? அல்லது இதே போன்ற அக சக்திகளின் வெற்றியா என்பதே வினவாகும்.

இங்கு ஈழப் போராட்டத்தில் வளர்ச்சியுற்று வந்த போராட்ட அமைப்புக்களது ஸ்தாபன வடிவம் முக்கியமாய்படுகிறது. கொள்கைப் பிடிப்பும், கருத்தொற்றுமையும். இயக்க வளர்ச்சிக்கொப்ப வளர்ச்சியுற்று இருப்பின் புறச்சக்திகளது ஆதிக்கம் தீர்மானகரமான பங் கினை ஆற்ற முடியாது. இவ்வகையில் நோக்கின் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலை அமைப்புக்களது படிமுறையற்ற வளர்ச்சியும், வீழ்ச்சியும் தற்போது வெளிப்படத் தொடங்கி யுள்ளன. ஆகவே 1983-ல் அய்ந்து பெரிய இயக்கங்கள் போராடுகின்றன என்பதிலிருந்து, தற்போது இரண்டு, மூன்று இயக்கங்கள் என்ற நிலைக்கு மாறியுள்ளன. இவற்றின் பின்னணியிலேயே தற்போதைய புதிய நெருக் கடி கண்டுணரப்பட வேண்டியவையாகும், சர்வதேச மட்டத்தில் இந்துப் பெருங்கடலின் அமைதிக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கும் இடையே சிக்கியுள்ள ஈழப் போராட்டம் இந்திய அரசியற் போக்கிற்கு சாதகமானதாகத் தொடர்கிறதா என்பதே சிந்திக்க வேண்டியதாகும். நேச சக்திகள் என்பவை யாவை? ஒரு நாட்டின் போராட் டத்தில் நேச சக்திகளின் பங்கென்ன? ஈழப் போராட்டத்தில் இது எப்பங்கினை வகிக்கின்ற தென்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய தாகும்.

தமிழகப் போலீசாரின் "Operation Tiger"-உம் இதற்கு முன்பாக ஒரு விடுதலை அமைப் பினது முறையற்ற நடவடிக்கையால் ஈழப் போராளிகள் முழுவதும் மீதான தமிழகப் பத்திரிக்கைகளின் வான்மூட்டும் அவதூறுப் பிரச்சாரமும் எதேச்சையானது என்பது சந்தேகத் திற்குரியதாகும். போராடும் அமைப்புக்களில் முறைகேடான பாதையைக் கொண்டவை தமிழ்நாட்டில் முறை தவறிய செயல்பாட்டைக் கடந்த மூன்று வருட காலங்களில் தொடர்ந்து நடத்தியது உண்மைதான். ஆனாலும் கூட ஒட்டு மொத்தமாகப் போராடும் அமைப்புக் களையும், தலைவர்களையும் அவமதித்ததும், ஆயுதப் பறிப்பும் பின்னணியற்றவை என்பதற்கு விளக்கந்தர முற்படுவது வெகுளித்தனமானது.

சார்க் மாநாட்டிற்கான முன்னேற்பாடென்ற ஊகமும், மத்திய அரசு தமக்குத் தெரியாதென வும், மத்திய அரசினது அறிவுறுத்தலே என தமிழக அரசும் மாறி மாறி கூறியது, பத்திரிக் கைகளில் வெளியான செய்திகள். இவற்றின் முடிவில் பெங்களூருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை தொடரப்பட்டுள்ளது. இத்தருணத்தில் கவனிக் கப்பட வேண்டியது யாதெனில் ஈழப் போராட்டத்தினது சமரசத் தீர்வுக்கு மத்தி யஸ்தம் வகிக்கும் இந்திய அரசினது அறிவுறுத் தலுக்கு விடுதலை இயக்கங்கள் உள்ளாகிக் கொண்டிருக்கும் அதே வேளையில் அமெரிக் காவின் ஏவல் நாயான இஸ்ரேலின் பிரதமர் இலங்கை விசயத்தை மேற் கொண்டிருந்தார்

எனவே இலங்கை அரசுக்கும் விடுதலை இயக்கங்களுக்குமிடையிலான மத்தியஸ்தராக இந்திய அரசு விளங்கியது போல், இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே மத்தியஸ்தராக இலங்கைத் தரப்பில் அமெரிக்கா விளங்கி வருகிறது.

இந்நிலையிலே இலங்கைக்கான, இந்தியத் தூதர் தீட்சித்தின் விஜயம், ஜே. ஆர். அரசின் முடிவும் ஆரோக்கியமானதாக இல்லை என இந்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என ஜே. ஆர், மீண்டும் கூறியிருப்பது இங்கு நினைவுகூறத்தக்கது. மா காண சபைகளின் மிகக்குறைந்த கோரிக்கை யான வடக்கு, கிழக்கு இணைப்பிற்கே ஜே. ஆர். மறுதலிப்பது சிங்கள மக்களது தீர்மானிக்கும் தலைமையாக ஜே. ஆர். இருக்க முடியாததன் வெளிப்பாடேயாகும்.

இதற்கிடையே ஈழவிடுதலைப் போராட் டத்தில் போராடும் அமைப்பாக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரபல்யப்படுத்தப் படுவது சகஜமாகி வருகின்றது. ஈழப் போராட் டத்தினை மாகாண வரம்பிற்குள் இறுக்க முனையும் சக்திகளது திட்டமாக இது நடை முறைப்படுத்தப்பட்ட போதிலும், இவையாவற் றையும் மீறியதாக ஈழப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சக்திகளது பங்கினை ஒதுக்கி விட முடியாது.

தேசிய இனச் சிக்கலது கூர்மையானது முடிவுக்குக் கொண்டு வரப்படின் ஈழப் போராட் டத்தினது முற்போக்கானத் தன்மை வெளிக் கொணரப்படுவது தவிர்க்க முடியாததாகும். இவ்வகையிலே ஈழப் போராட்டத்தை தீர் மானிக்கும் சக்தியாக ஈழத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் கிளர்ந்தெழுவது இயங்கியல் நியதியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூலகம்

# மக்கள் கிளர்ந்தெழும்போது

எங்கு பார்த்தாலும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை பச்சை பச்சை. இயற்கையின் அத்தனை வளமுங் கொண்ட மகாராஷ்டிரா தாஞ மாவட்டத்தில் தானு, தால சரி பகுதிகள் மலையின் மடியில் அமைந்துள் ளன. இங்குதான் காய்ந்த சருகுகள் வேய்ந்த சிறிய குடிசைகள். மண்டியிட்டு மட்டுமே உள்ளே நுழையும் படியான கதவுகளற்ற வாசல். வெட்டப்படாத நீண்ட பரட்டைத்தலையும் இடுப்பில் ஒரு கோவணமுமாய் ஆண் ஆதிவாசி. மார்பு வரை மட்டுமே மறைக்கும்படியான பத்தும் பத்தாத ஒரே ஒரு முழச் சேலையுடுத்திய பெண் ஆதிவாசி. சுவரில் தொங்கும் மூங்கில் குழாய்களே பாட்டில்கள். மூன்று கற்கள் மட்டுமே உள்ள இடத்திற்குப் பெயர் சமையலறை. இதுதான் இவர்கள் ஓய்ந்த சிலமணி நேரத்தில் உண்ணவும் உறங்கவும் ஆன வீடு.

காலை ஆறு மணியிலிருந்து இரவு ஒன்பது மணிவரை நிலப்பிரபுவின் காட்டிலும், வீட்டிலும் ஓய்வில்லாத வேலை செய்ய வேண்டும். காலால் இட்ட வேலையை தலையால் செய்தாலும், நிலப்பிரபுவின் சாட்டை அடிக்கடி அவர்களை பதம்பார்க்கும். பெண்களின் நிலையோ ரொம்பவும் அவலமானது. நிலப்பிரபுக்கள் தம் வீட்டு ஆடு, கோழிகளை அடித்துச் சாப்பிடுவதுபோல, அவர்களுக்குத் தேவைப்பட்ட போதெல்லாம், விருப்பப்பட்ட பெண்களை விருந்தாக்கிக் கொண்டார்கள்.

இது தவிரவும், நிலப்பிரபுவின் முத்திரையுடன் பித்தளைப் பூணிட்ட கைத்தடி ஒவ்வொரு வீட்டிற்கும் மாறி மாறி வந்து கொண்டிருக்கும். காலையில் யார் வீட்டிற்கு அது வந்து சேர்கிறதோ அன்று அந்த குடும்பத்தினரின் வேலைமுறை; அக்குடும்பத்தவர் முழுக்க நிலப்பிரபுவின் வீட்டில் எந்த கூலியும் பெருமல் வேலை செய்ய வேண்டும். இம்முறை பரம்பரை பரம்பரையாக நடந்து கொண்டிருக்கிறது.

கல்வியறிவில்லாத அவர்களுக்கு ஒன்று இரண்டு ஐம்பதுவரை மட்டுமே எண்ணத் தெரியும். அதுவும்கூட புல்லுக் கட்டுகளை எண்ணுவதற்காக மட்டுமே வயல்வெளியில் அளிக்கப்பட்ட கல்வியின் விஸ்தாரமாகும். இச்சூழலில் காட்டிலாகா அதிகாரிகளின் கெடுபிடிக் கொடுங்கோன்மை வேறு.

இப்பகுதிகளில் உள்ள கோர்ட்டுகளில் பெரும் நிலப்பிரபுக்களே கௌரவ நீதிபதிகள்.

ஆதிவாசிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கேள்விப்பட்டு, சிறையிலிருந்து விடுதலையடைந்த இரண்டு கம்யூனிஸ்ட் தோழர்கள் இந்த ஆதிவாசிகளை ஒன்றிணைத்து கிளர்ந்தெழச் செய்யப் பாடுபட கட்சியின் உதவியோடு முன்வருகிருர்கள். இதற்கு அவர்களுக்கு மூன்ருண்டுக்கு மேலாகிறது. இருவரில் ஒருவர் பெண்.—கோதாவரி பாருலேகர். மற்றவர் காம்ரேட் டால்வி.

இவர்கள் அறிவுக் கூர்மையுள்ள ஐந்து ஆதிவாசிகளை தேர்ந்தெடுத்து பம்பாய்க்கு அழைத்துச் சென்று அரசியல் வகுப்பு நடத்தத் தொடங்கினுர்கள்.

''சமூகம் என்ருல்...'' ஒரு ஆதிவாசி கொட்டாவிவிட்டார். அடுத்து உழைப்பு. போராட்டம் என்று விளக்கமாகப் பேசப்போக அரைமணி நேரத்தில் ஐந்து பேர்களும் தூங்கிப் போனுர்கள்.

இவர்களேதான் பின்னர் தலைவர்கள் இல்லாத நேரத்திலும் தளராத மனத்தோடு நின்று போராட்டத்தை நடத்தினுர்கள்.

அவர்களோடு கூடவே உண்டு, உறங்கி, பட்டினி கிடந்து, இவர்கள் நமக்கானவர்கள் நம்பிக்கைக்குரியவர்களென்று உணர்ந்த பின்னரே அம்மக்கள் இவ்விருவரின் சொற்படி நடக்கத் தலைப்படுகிருர்கள். அவர்களின் உத்தரவு செங்கொடியின் உத்தரவு, அவர்களது ஆலோசனை செங்கொடியின் ஆலோசனை எனவே செங்கொடி ஆணையின்கீழ் சீற்றத்துடன் வேலை நிறுத்தப் போருக்கு சீறிக் கிளம்புகிருர்கள்.

இவ்விஷயம் அப்போது மத்திய அமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாயைக் கலக்கு

www.tamilarangam.net



# இதயமுள்ள எவரையும் அழவைப்பது மட்டுமல்ல கிளர்ந்தெழவும் செய்யும்

கிறது. போராட்டப் பகுதிக்கு இராணுவம் அனுப்பப்படுகிறது. அதன் பிறகும் வேலை நிறுத்தம் தொடர்கிறது. இறுதியில் அரசாங்கம் அடிபணிகிறது நிலப் பிரபுக்களுக்கு ' புதிய பாடம் புகட்டப் படுகிறது. இது தான் ஆதிவாசிகள் கிளர்ச்சியின் உள்ளடக்கம்.

ஆதிவாசிகள் வாழ்ந்த பகுதிகளில் கட்சி ஊழியராக வேலை செய்த கோதாவரி பாருலேகரே அனுபவ பூர்வமாக உணர்ந்து இந்நூலை எழுதியிருக்கிருர். இதுவே அவருடைய முதல் புத்தகமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்திகளின் உண்மையும், விஷய கணமுமே சாகித்ய அகாடமி விருதை பெற்று தந்திருக்கிறது.

மார்க்சீய தத்துவத்தையும், மக்கள் இயக்கங்களின் நடைமுறைகளையும் அரைகுறையாகப் புரிந்து கொண்டு போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லுகையில் இயக்கம்பட்ட இன்னல்களையும், கொடுத்த உயிர்த் தியாகங்களையும் புரிந்து கொள்ளாமல், மாலைநேர பொழுது போக்காக 'கிண்டலடிக்கும்' அறிவுஜீவிகளென சொல்லிக் கொள்கிறவர்களின் கண்களை இந்நூல் நிச்சயம் திறந்து வைக்கும்.

அம்மக்களிடையே பணியாற்றச் சென்ற தோழர் திருமதி பாருலேகர் பட்ட துன்பங்கள் இதைப் படிக்கிற, இதயமுள்ள எவரையும் அழவைப்பது மட்டுமல்ல கிளர்ந்தெழவும் செய்யும்.

ஒரு ஊரில் பண்ணையாரின் ஆணைக்குப் பயந்து பாருலேகருக்கு ஒரே ஒரு இரவு தங்குவதற்குக்கூட எங்கும் இடமளிக்க மறுக்கப்படுகிறது. ஆண்டவன் சன்னதியிலும் பண்ணையாரின் ஆணையால் தங்குமிடம் மறுக்கப்படுகிறது.

இரவு முழுவதும் சிறு வெளிச்சமும் இல்லாமல் ஒரு மரத்தடியிலேயே தன்னந் தனியாக கழிக்கிருர். காலையில் ஒரு வீட்டில் கெஞ்சிக் கேட்டு குளிக்க அனுமதி பெற்று துணி துவைத்துக் கொண்டிருக்கும்போதே விரட்டியடிக்கப்படுகிருர். இந்த மாதிரியான எதிரிகளின் தொடர்ந்த தொல்லைகள் அதிகமாக அதிகமாக அவர் மனம் இரும்பாகிறது; வேகம் ஊற்றெடுக்கிறது. இம்மாதிரியான கணக்கிலடங்கா நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது இந்நூல்.

இந்நூல், மக்களிடையே பணியாற்றி அவர்களை இயக்கத்திற்கு வென்றெடுப்பதிலுள்ள சிரமங்களையும், மனந்தளராத போராளிகளின் வரலாற்றையும் விளக்கும் கருத்துக்கருவூலமாகத் திகழ்கிறது.

இந்நூல் கோதாவரி பாருலேகரால் மராட்டிய மொழியில் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலை நேஷனல் புக் ஏஜென்ஸி நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். இந்நூல் போராளிகளுக்கான கையேடு.

**எஸ். என். ஆர்.**

கோதாவரி பாருலேகர்

☐ 'ஆதிவாசிஸ் ரிவோல்ட்' ☐ விலை ரூ 11-00 நேஷனல் புக் ஏஜென்ஸி (பி) லிட்., 12, பக்கிம் சட்டர்ஜி தெரு, கல்கத்தா. 12,

☐ ந. பிச்சமூர்த்தி கவிதைகள் ந. பிச்சமூர்த்தி விலை.ரூ.30. க்ரியா, 268 இராயப் பேட்டை நெடுஞ்சாலை சென்னை-14 1934 முதல் 1976 வரை இன்னும் விவாதத்திற்குரியதாக இருக்கும் புதுக் கவிதைகள்.

☐ (1) 'இன்னும் தயக்கமா?' பாடல்கள் (2) 'வறுமையை ஒழிப்போம்' நாடகங்கள் விலை முறையே ரூ ஒன்று, ஒன்று கிடைக்குமிடம்: சென்னை புக்ஸ், சென்னை-2

அறிவியல்பற்றியபாடல்கள், மற்றும் நாடகங்கள்

☐ லெனின். ஜே.வி .ஸ்டாலின் தமிழில்: தியாகு விலை.ரூ 6.50. சென்னை புக்ஸ், 6, தாயார் சாகிப் தெரு, 2வது சந்து, சென்னை-2.

லெனினைப் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில்ஸ்டாலின் ஆற்றிய உரைகள் பேட்டிகள் முதலியன. ஒரு மாபெரும் தலைவர் ஒருயுகப்புரட்சித் தலைவரைப் பற்றிய மதிப்பு மிக்க மதிப்பீடுகள்.

☐ இனிவரும் காலம். சபேசன் விலை ரூ. 6 வெளியீடு: அருட்குமரன் 8/1 டாக்டர் டி.வி. தெரு, சேத்துப் பட்டு சென்னை-31 ஈழத்தின் பொதுவாக அறியப்பட்ட கவிஞர்களில் சபேசனும் ஒருவர். அவருடைய கவிதைபற்றிய அபிப்ராயங்களும் கவிதைகளும்.

☐ பிரேம்சந்த். அம்ரிராய். தமிழில்: ஆர் சூடாமணி, விலை. ரூ 2.50 நேஷனல் புக் டிரெஸ்ட் பிரேம்சந்த் பற்றிய வாழ்க்கை வரலாறு. குழந்தைகளுக்கானப் புத்தகம், பெரியவர்களும் படிக்க வேண்டிய புத்தகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலம்

ஈழ நண்பர் கழக
மாத இதழ்

□

மலர் 1 இதழ் 4

டிசம்பர் 1986

□

தொடர்புகள்
அனைத்துக்கும்
பாலம்
த. பெ. எண். 39
மதுரை - 2

□

ஆசிரியரும்
வெளியிடுபவரும்
இரா. திரவியம்

# இந்திய அரசின் அணுகுமுறை மாற வேண்டும்

'ஈழ விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு திசை திருப்புகிறது' என்ற உணர்வு பரவலாக எல்லோர் உள்ளத்திலும் தோன்றியிருக்கிறது.

இப்படி ஒரு உணர்வு தோன்றியதற்கு நியாயமான காரணமும் இருக்கத்தான் செய்கிறது.

ஈழ விடுதலை இயக்கங்கள் மீது தமிழக அரசும் இந்திய அரசும் எடுத்த நடவடிக்கைகளே இப்படியொரு மனவுணர்வைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்திய அரசின் சமாதான முயற்சி என்பது 83 ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து அகதிகள் வருகையின் காரணத்தாலேயே ஆரம்பமானது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் எவ்வகையான அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்துவது என்பதைத் தீர்மானிக்கவே ஜெயவர்த்தனா அரசுக்கு ஒன்றரை வருட காலம் பிடித்தது.

இதே நேரத்தில், இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசுக்குக் கொடுத்த வலியுறுத்தலே சிங்கள இனவாதிகள் பக்கம் சாய விடாமல் தடுத்து நிறுத்தியது. ஆனாலும் முடிவில் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தைத் தொடரிலிருந்து அகற்றப்பட்டது.

இதன் பின்னரும் தொடர்ந்து இந்திய அரசின் பிரதிநிதிகள் ஜெயவர்த்தனாவையும், பிரேமதாசாவையும், அத்துலத் முதலியையும் கொழும்பிலும், பஹாமாசிலும் சந்தித்தனர். பேச்சு வார்த்தைக்கான பேச்சில் ஈடுபட்டனர். இம்முறை ஆயுதம் தாங்கிய அமைப்புக்களையும் சமரப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது என முடிவெடுத்தனர்.

1984 ஜூன் 18 லிருந்து மூன்று மாத காலத்திற்கு 'போர் நிறுத்தம்' ஆரம்பிக்கப்பட்டது.

போர் நிறுத்தத்தை விடுதலை இயக்கங்கள் மீறுகின்றன என்ற கூச்சலைப் போட்டுக்கொண்டே ஜெயவர்த்தனாவின் அரச படைகள் போர் நிறுத்தத்தை மீறின.

திம்புப் பேச்சுவார்த்தையில் கூட்டணியும், விடுதலை இயக்கங்களும் பங்கேற்றன. பேச்சு வார்த்தைத் தொடரும்போதே வவுனியாவில் ஸ்ரீலங்கா அரச படைகள் 200 தமிழரைக் கொன்றது. எனவே இந்தச் சூழ்நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்பதை விடுதலை இயக்கங்கள் உணர்ந்ததால் பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறின. இந்தச் சமயத்தில் இந்திய அரசினால் பலவந்தம் எதையும் மேற்கொள்ள இயலவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதுப்புது திசைகளில்
வாசலைத் திறக்க

□

புதிய நூல் வெளியீட்டு
நிறுவனம்

□

பொன்னி புக்ஸ்
25, மூன்றாவது தெரு
பாரதீஸ்வரர் காலனி
சென்னை-24.

வட்டமேசை மாநாட்டின் ஒன்றரை வருட காலத்தில் இஸ்ரேல், பாகிஸ்தான், தென் கொரியா, சீனா, பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து, ஆயுதங்களையும், இராணுவப் பயிற்சியையும் ஸ்ரீலங்காப் பெற்றுக்கொண்டது. திம்புப் பேச்சுவார்த்தையின் போது திட்டமிட்டு வவுனியாவில் தொடங்கி கிழக்குப் பகுதி வரைக்கும் அழிப்பு வேலைகளைத் தொடர்ந்தது. லட்சக்கணக்கான மக்கள் அகதிகள் ஆயினர். கோடிக்கணக்கான உடைமைகள் சூறையாடப்பட்டன.

இப்பொழுது மூன்றாவது சமரச முயற்சி. இதில் சிறப்பு அம்சம் எதுவென்றால் ஜெயவர்த்தனாவை மகிழ்விக்க இந்திய அரசு முயற்சி செய்வதுதான். 'சார்க்' மாநாட்டிற்கு முன்னர் விடுதலை இயக்கங்களின் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்து அவமதித்தது ஒரு உதாரணம். ஜே. ஆரை இந்திய அரசு சந்தோசப்படுத்தினாலும், ஸ்ரீலங்காவிற்குத் திரும்பிய பின் ஜே. ஆர். சமரச முயற்சியில் தமிழ்ப்பிரதிநிதிகளின் கோரிக்கைகளை பகிரங்கமாகவே நிராகரித்தார்.

இந்தியாவின் நல்லெண்ண முயற்சியின் பிடி இறுக இறுகத் தப்பித்துச் செல்வதற்கே ஜெயவர்த்தனா விரும்புகிறார்.

இந்தியாவுடன் ஜே. ஆர். பேச்சு நடத்தும்போதே தனது குருவான அமெரிக்காவையும், அதன் தத்துப்பிள்ளையான இஸ்ரேலையும், துணைக்கு அழைத்து வருகிறார்.

அண்மையில் கூட பெங்களூர் 'சார்க்' மாநாடு முடிந்து ஜெயவர்த்தனா நாடு திரும்பியவுடன் இஸ்ரேல் அதிபர் சைம் ஹெர்சாக் கொழும்பு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஈழப் பிரச்சனையை இந்திய துணைக் கண்டப் பிரச்சனையாக இந்திய அரசு நினைத்தாலும், இலங்கை அரசு அவ்வாறு நினைக்கவில்லை. தீர்வு என்பது இலங்கை அரசின் கையிலும் இல்லை.

எனவே இந்திய அரசானது தனது அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். விடுதலை இயக்கங்களை விட ஜெயவர்த்தனா அரசை நம்புகின்ற அளவிற்கு இந்திய அரசின் நடவடிக்கைகள் அமைகின்றதோ என்ற மனக் குமுறல் தமிழக மக்களிடம் உருவாகத் தொடங்கியிருக்கிறது.

இந்த மனக்குமுறல் அதிகரிப்பது ஆரோக்கியமாக இருக்காது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழித்திருப்போம்

இளையவன்

''சென்றிக்கு ரைமாச்சு
சென்று வருகிறேன் நண்பா !

□

என்ன அது
புரிய வில்லையா ?
வியர்வையை விதைத்த
வயல் வெளிகளில்
பூத்துக் குலுங்கும்
நெல்மணிக் கதிர்களுக்காய்
கெற்றப் போலும் [கவணி வில்லு]
குறுணிக் கல்லும்
கையில் ஏந்திக்
காவல் இருந்தோம்

தண்ணீரில் தத்தளித்து
கடலுணவு தேடிவர
போனவரின் வருகைக்காய்
கரைகளில் விழிபுதைந்து
காவல் புரிந்திருப்போம்

□

இயற்கை விரிந்த
எலலைப்பரப்பில்
இலங்கைத் தீவு
ஒரே ஒரு தேசம்
என்னும் எண்ணமே
பேரிடியானதால்...
மானுடம் இம் மண்ணில்
மரணித்துப் போனதால்
மக்களுக்கு இப்போ காவல் தேவை

□

உழைப்பதும் உண்பதும்
உறங்குதலும் கூட
சட்ட விரோதம் என்றே
பிரகடனம் இருப்பதால்
சென்றிக்கு செல்கின்றேன்.

□

முற்றத்தில் இருக்கும்
இராணுவ முகாமை
மூடிடச் செய்ய
முடியாது இருப்பதால்....
முன்னேற விடாது
தடுத்தல் அவசியம்.

□

எனது கவலையை
எமது அவலத்தை
அடுக்கடுக்காக
எடுத்துச் சொல்லி
என்னதான் ஆக....

□

நிச்சய மிது :
எங்கள் தேசம்
நாளை பிறக்கும்

உலகின் மானுடம்
நெஞ்சை நிமிர்த்தும்

இல்லாதாரே இல்லையென்ற
உலகம் ஒன்றை
எங்கள் இரத்தம்
எழுதிச் செல்லும்.

சமத்துவம் பூத்த
தேச மொன்று
இந்துமாக்கடலின்
கலங்கரை விளக்காய்
எழுந்து நிற்கும்.

அப்போது தான்
எம் பணியும் பயனும்
உனக்கு புரியும்
வார்த்தையின் அர்த்தம்
வாழ்க்கையில் தெரியும்.
அதனால்....
விழித்திருப்போம்
சென்றிக்கு ரைமாச்சு
சென்று வருகிறேன் நண்பா !

□

www.tamilarangam.net





வியப்படைய ஏதுமில்லை. இவர் சாட்சாத் ஜெயவர்த்தனாதான். ஒரு நாட்டின் ஜனாதிபதிதான் சிறுவனுக்கு துப்பாக்கிச் சுடப் பயிற்சி தருகிறார். என்னே அகிம்சை. முதல் நாள் பெங்களூர் சார்க் மாநாட்டில் 'மகாத்மா' காந்தி வேஷம். மறுநாள் யூத இன வெறிக் கொடுங்கோலன் இஸ்ரேல் அதிபர் ஸைம் ஹெர்சாக்குடன் கைக்குலுக்கல்.

□ கொழும்பு நவம்பர் 20. இஸ்ரேல் அதிபர் சைம் ஹெர்சாக் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா இருவரும் யாரும் எதிர்பார்க்காத வகையில் சந்தித்தனர்.

கொழும்பு விமான நிலையத்தில் வந்திறங்கிய இஸ்ரேல் அதிபர் சையம் ஹெர்சாக் 22 கிலோ மீட்டர் தெற்கே உள்ள கொழும்பு நகருக்கு விமானப்படை ஹெலிகாப்டர் மூலம் அழைத்து வரப்பட்டார்.

□ அரசியல் நோக்கங்களை எட்டுவதற்கு எந்த மாதிரி கிளர்ச்சியைக் கடைபிடித்தாலும் அது புத்தர், காந்தி போதித்த அகிம்சை வழியில் அமைய வேண்டும்.

பெங்களூர் 'சார்க்' மாநாட்டில் ஜெயவர்தனா பேச்சு நவம்பர் 16.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்